Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை: ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 13 29 - 11 - 94 செவ்வாய்க்கிழமை ஓசை 284

## கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு ஜனவரி முதலாம் திகதி மூடுவிழா

சகல கோட்டக் கல்வி அலுவலகங்களும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மூடப்படும் எனவும், அங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு செல்ல இடமாறுபணிக்கப்படுவர் எனவும் கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான கூறியுள்ளார். மாத்தறை புனித சேவியர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறியதாவது, ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டு இருக்கிறது இதனால் மேலதிகமாக 275 மில்லியன் ரூபா செலவாகிறது பாடசாலைகளில் விடுமுறை பெற்று தனியார் பாடசாலைகளில் வகுப்பு நடத்தும் ஆசிரியர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் தயவு தாட்சண்யம் இன்றி தண்டிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

# தலைவர் பிரபாகரன் கோரிக்கைக்கு சந்திரிகா அரசாங்கம் இணக்கம்

## லெப். கேணல் மல்லியின் கொலை குறித்து விசாரணை நடத்துவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

கடந்த 16-ம் திகதி நெடுங்கேணிப் பகுதியில் லெப். கேணல்மல்லி கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தலைவர் பிரபாகரனின் கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருப்பதாக சர்வதேச செய்திஸ்தாபனம் ஒன்று தெரிவித்தது. இத் தகவலை கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி நெடுங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்கியதில் லெப். கேணல் மல்லி (அமுதன்) யைக் கொன்றதோடு அவரது தலையையும் துண்டித்துச் சென்றனர்.

இது குறித்து, தலைவர் பிரபாகரன் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்தரத்வத்தைக்கு எழுதிய பதில் கடிதத்தில், இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்திப் பதில் தருமாறு கோரியிருந்தமை தெரிந்ததே. இக்கடிதத்திற்கே அரசாங்கம் பதில் அளித்துள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அவ் சர்வதேச செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான மல்லியை சுட்டுக் கொன்று அவரது தலையை இராணுவம் வெட்டியது தொடர்பாக நீதிவிசாரணை நடத்த சிறிலங்கா அரசு ஒப்புக்கொண்டுள்ளது என்றும்,

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்களில் அரசாங்கத்தின் நீதிவிசாரணை பற்றி குறிப்பிட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இது குறித்து கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் தருகையில் விடுதலைப் புலிகள் அறிவித்திருந்த போர் நிறுத்த காலத்தில் படையின

(6ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை அனுமதி அட்டை பலருக்குக் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

நூற்றிற்குமேற்பட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு நேற்றுவரை க. பொ. த. சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டது.

டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிஅட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் யாழ் கல்வித் திணைக்களத்தில் தமது முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து யாழ் கல்வித்திணைக்களம் பரீட்சைத்திணைக்களத்துக்கு இவ்விடயம் தொடர்பாக அவசர செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளதாக தெரியவருகின்றது. எனினும் இதற்குரிய தகுந்த பதில் எதுவும் இதுவரை கிடைக்கப்பெற்ற

(6ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு



லெப். ஐங்கரன்

கிளிவெட்டிப் பகுதியில் கடந்த 25ந் திகதிகாலை பத்துமணிக்கு இயக்க வேலையாக சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைத்து தாக்கியதில் போராளி ஒருவரும் முழுநேர ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளை ராணுவ ரீதியாக தோற்க வைப்பது சாத்தியமல்ல

### சிறிலங்கா படையினர் கருத்து

(கொழும்பு)

மரபுரீதியானபோர்ஒன்றை நடத்தும் அளவுக்கு விடுதலைப் புலிகள் வளர்ந்துவிட்டதால் சிறிலங்கா இராணுவம் அவர்களைப் போரில் வெல்வது சாத்தியமானதல்ல இவ்வாறு சிறிலங்காவின் படைச்சிப்பாய்ஒருவர் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ போன்ற அதிகாரிகள் இராணுவ அணுகுமுறையிலேயே நம்பிக்கை வைத்திருந்தனர். யாழ்ப்பாணத்தைத் கைப்பற்றுவதற்கான திட்டம் இரண்டு தடவைகள் வகுக்கப்பட்டது ஆனாலும் 20,000 வரையிலான படையினர் இப்போரில் பலியாகலாம் எனக் கணிப்பிட்டு அவை ஒத்திவைக்கப்பட்டன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## இராணுவ பலத்தின் மூலமே புலிகளை அடக்கவேண்டும்

### ஐ. தே. க. பா. உ.

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை இராணுவ பலத்தின் மூலமே அடக்க முடியும் இவ்வாறு பாராளுமன்றத்தில் ஐ. தே. க. உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; விடுதலைப் புலிகள் பலம் வாய்ந்த இராணுவ அமைப்பைக் கட்டி எழுப்பியுள்ளனர். பொலிஸ் படையை உருவாக்கியுள்ளனர். கடற்படையையும் கொண்டுள்ளனர். இந் நிலையில் அவர்கள் சமாதானத்தின்மீது ஒரு போதும் நாட்டம் கொள்ள மாட்டார்கள்.

அத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு எனவும், அதனை இராணுவ பலம் மூலமே அடக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

### பேராதனை பல்கலைக் கழகத்தின்

## கௌரவப் பட்டமேற்க சந்திரிகா மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு பேராதனை பல்கலைக்கழகம் வழங்க முன்வந்த கௌரவ கலாநிதி பட்டத்தை அவர் ஏற்க மறுத்துள்ளார். இது தொடர்பாக பேராதனை பல்கலைக்கழக துணைவேந்தருக்கு ஜனாதிபதியின் செயலாளர் பலபத்த பெண்டி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் பெருவெள்ளம் 80 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

### போக்குவரத்து துண்டிப்பு; வயல்கள் மூழ்கின

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 80,000 ற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையால், மக்கள் அவ்விடங்களிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

பல பகுதிகளில் மக்களுக்கு தேவையான உணவுப்பொருட்களை விநியோகம் செய்ய முடியாமலிருப்பதாக அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பலர் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது

மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் கடவத்தமடு என்ற இடத்தில் ஆறு அடிவெள்ளம் பாய்கின்றது. ஆரையம்பதி, நாவற்குடா, கல்லடி, இருதயபுரம், கல்லியங்காடு, மாமாங்கம், மேட்டுச்சேனை போன்ற இடங்களிலுள்ள மக்கள் பாடசாலைகளில் தஞ்சம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணம் வழங்குவதில் தமிழருக்கு பாரபட்சம்

(மட்டக்களப்பு

கிழக்கில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழையின் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட இடங்களிலிருந்து வெளியேறிய தமிழ் மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதில் அரசாங்க அதிகாரிகள் பாரபட்சம் காட்டி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்கள் வாழும் பல கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ள நிலையில் காணப்படுமிடத்து அரசாங்க அதிகாரிகள் அப்பகுதிகளை அலட்சியப்படுத்தி சிங்கள முஸ்லிம் மக்களுக்கு படகுகள் மூலம்உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றனர்.

முக்கியமாக சேருவில பகுதியில் நிவாரண உதவிகளை கவனிக்க கொழும்பிலிருந்து உயரதிகாரிகள் வருகை தந்துள்ளதாகவும் இதேவேளை மட்டக்களப்பின் எல்லைப் பகுதிகளில் வாழும் தமிழ்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நோயால் 9 மாதங்களில் 274 குழந்தைகள் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் கடந்த ஒன்பது மாதங்களில் பல்வேறு நோய்கள் காரணமாக இருநூற்றி எழுபத்திநான்கு குழந்தைகள் மரணமாகியுள்ளதாக யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவு வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

மரணமான குழந்தைகளில் பிறந்த ஏழு நாட்களுக்கு உட்பட்ட 158 குழந்தைகளும் ஏழு தொடக்கம் இருபத்தியொருநாட்கள் வரை வயதான 116 குழந்தைகளும் அடங்குவதாக அப்புள்ளி விபரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

முதல் மூன்று மாதத்துடன் முடிவடைந்த காலாண்டில் 85 குழந்தைகளும் இரண்டாம் காலாண்டில் 93 குழந்தைகளும் - மூன்றாம் காலாண்டில் 96 குழந்தைகளும்

(6ஆம் பக்கம் பார்க்க)

### 93 நவீனரக துப்பாக்கிகள் வைத்திருந்த

## முன்னாள் ஐ.தே. க. அமைச்சர் மீது பாதுகாப்பு அமைச்சு விசாரணை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஒருவர் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. பொலிஸ் திணைக்களத்தால் இம்முன்னாள் அமைச்சரின் பாதுகாப்புக்கென வழங்கப்பட்டிருந்த நவீன ரகத் துப்பாக்கிகள் தொடர்பாகவே இவ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இம் முன்னாள் அமைச்சர் தற்போது எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினராகியிருப்பதும், இவர் வசம் 93 நவீன ரகத் துப்பாக்கிகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை செஞ்சிலுவையின் நிதியை ஐ. தே. க. தேர்தலுக்கு பயன்படுத்தியது

(கொழும்பு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க நிதி தேர்தல் செலவினங்களிற்காக ஐக்கிய தேசியக் கட்சியினரால் பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதிக்கு முறையிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலக தலைவரின் மகன் செஞ்சிலுவைச் சங்க வாகனங்களையும் அதன் நிதிகளையும் தமது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் வேலைகளிற்காக செலவு செய்துள்ளார் என்றும் இதற்கு நடவடிக்கை எடுத்து உதவுமாறு புதிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு செஞ்சிலுவைச் சங்கத்தில் இருந்து கிடைக்கும் செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது. (இ. நி)

## சமாதானமுயற்சியைதொடர சந்திரிகாவிடம் கோரிக்கை

### கனேடிய நிவாரண அமைப்பு விடுத்தது

(கொழும்பு)

சிறிலங்காவில் சமாதான முயற்சிகளை ஊக்குவித்தும், வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு உதவவும் முன்னோடித் திட்டம் ஒன்று கனடாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

''சிறிலங்காவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான கனேடிய நிவாரண அமைப்பு'' என்ற கனேடியர்களையும் இலங்கைத் தமிழர்களையும் உள்ளடக்கிய அமைப்பு இப் புதிய திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

சமாதான முயற்சிகளை விரைந்து முன்னெடுக்குமாறு இவ் அமைப்பு ஜனாதிபதி சந்திரிகாவைக் கோரியுள்ளது.

இவ் அமைப்பில் அங்கம் வகிக்கும் கனடாவின் ஒன்ராறியோ மாகாண சட்டசபை உறுப்பினர் கிரான் கோலா ஜனாதிபதி சந்திரிகாவிற்கு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும்படி அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

திரு. கிரான் கோலா ஜனாதிபதி சந்திரிகாவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் வருமாறு:

ஜனாதிபதித் தேர்தலில் உங்களுக்குக் கிடைத்த பெரு வெற்றி சிறிலங்காவில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு மக்கள் உங்களுக்கு வழங்கிய ஆணையாகவேஇருக்கிறது. கடந்த 17 வருடகாலத்தில் எந்த வகையிலும் சிறிலங்காவில் சமாதான முயற்சிகள் வெற்றிபெறவில்லை. எனவே தற்போது தங்களுக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஒரு நிரந்தர சமாதானத்திற்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## சமூகமாற்றத்திற்கான அரங்கு

ஈழத்தமிழரிடையே சமூக மாற்றத்திற்கான வன்மையான அரங்கினை வளர்ப்பது பற்றிய ஒருநாடக ஆக்கவியல் ஆய்வு நூல் எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. விநியோகம் வசந்தம் புத்தக நிலையம். (10203)

## மனிதரும் சமூக வாழ்வும்

சி. கா. செந்திவேல் எழுதிய மனித சமுதாய தோற்றம், வளர்ச்சி பற்றிய பதின்மூன்று ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு. எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. விநியோகம் - வசந்தம் புத்தக நிலையம் (10202)

## வெள்ளப் பாதிப்பு பிரதேசங்கள் பிரகடனம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் நான்கு செயலகப் பிரிவுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. பட்டிப்பளை, வெல்லாவெளி, வவுணதீவு, வாகரை ஆகிய பிரதேச செயலகப் பகுதிகளே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

## திருமணப்பதிவு சான்றிதழ்வழங்கல்

(கொழும்புத்துறை)

வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தினரின் ஏற்பாட்டில் இதுவரை காலமும் திருமணம் செய்து பதிவு செய்யாது குடும்பமாக வாழ்ந்து வரும் தம்பதியினர்களை மயிலங்காட்டு கிராமத்தைச் சேர்ந்த பல குடும்பங்களின் திருமணப்பதிவுகள் வலி - வடக்கு விவாக, பிறப்பு, இறப்பு, பதிவாளர் திரு. செ. அன்னலிங்கம் அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

மயிலங்காட்டு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் வைத்து இவர்களுக்கான இத் திருமணப் பதிவுச் சான்றிதழ்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (24)

---

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
07 - 03 - 1961

தாயக விடிவில்:
29 - 11 - 1987

### வீரவேங்கை குலம்
(மார்க்கண்டு விஜியானந்தம்)

நீர் புரிந்த பாசசெயல்கள் இடையில் நிற்க!
அன்னியன் படையெடுத்து வந்தபோது, மக்களை
காக்கவென களம் புகுந்தீரே! ஏழாண்டு
மறைந்ததையா, ஆனால் உன் நினைவுகள்
எங்கள் கண்ணுக்குள் நிற்குதையா!

வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி. (10214) - குடும்பத்தினர்

---

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்தும்

## நினைவுப் பேருரை

யாழ். இந்துக்கல்லூரி முன்னைநாள் அதிபர்
**அமரர் ந. சபாரத்தினம்**
அவர்களது

## நினைவுப் பேருரை

காலம்: 30- 11- 94 புதன்கிழமை
நேரம்: பிற்பகல் 3. 30 மணி
இடம்: குமாரசுவாமி மண்டபம்
பேருரை நிகழ்த்துபவர்:
பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன்
தலைவர், பொருளியற்றுறை.
யாழ். பல்கலைக்கழகம்.
பேருரை:
அபிவிருத்தியில் கோட்பாடுகளும் பரிமாணங்களும்பெறுமானங்களும்

'ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்'

குறிப்பு: மட்டுப்படுத்தப்பட்டளவில் பேருரைப் பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளதால் பேருரை மண்டபத்தில் மட்டுமே இவை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-10799) யா. இ. க- ப. மா. ச செயலாளர்

---

## அறிவித்தல்

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் (வ.து)
கிளைக்குழுத் தேர்தல் 1994

சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்தின் 23 கிளைகளுக்குமான கிளைக்குழுத் தேர்தல் நியமனப்பத்திரங்கள் 3.12.94-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் முற்பகல் 10 மணிக்கும் இடையில் அவ்வக் கிளை நிலையங்களில் உதவித் தேர்தல் உத்தியோகத்தர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். தேர்தலில் பங்குபற்றத் தகுதியுள்ளோர் தத்தமது கிளை நிலையங்களில் ரூபா 10/-ஐச் செலுத்தி உரிய நியமனப்பத்திரங்களைப் பெற்று பூரணப்படுத்திசமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பிரதேச செயலகம், கூட்டுறவுப்பகுதி, தென்மராட்சி சாவகச்சேரி.

சி. ஐயாத்துரை
தேர்தல் உத்தியோகத்தர்.
சாவகச்சேரி.ப.நோ.கூ.சங்கம்
சாவகச்சேரி
(சி-10790)

---

## அந்தியேட்டி அழைப்பிதழ்

தோற்றம்:
16 - 07 - 1936

மறைவு
30 - 10 - 1994



### பரமேஸ்வரி வேலுப்பிள்ளை

29.11.94 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியை நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறேன். மேலும் 30-10-94இல் நடைபெற்ற அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மஞ்சத்தடி இணுவில். (10222)

பேரன்
க. சந்திரமோகன்

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### V. P. செல்லையா (D. S.)

தோற்றம்: 1929 - 10 - 04
மறைவு: 1994 - 10 - 30

அன்பிலே சிறந்தவராய் பாசத்தின் உறைவிடமாய் பண்பிலே உயர்ந்தவராய் நேர்மை தவறாதவராய் கடமையிலே வீரராய் கொடை வள்ளலாய்

வாழ்ந்து எமக்கு வழிகாட்டி பாருக்கே உழைத்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் இவ்வுலகைவிட்டு மறைந்தாலும் எம் இதயத்தில் என்றும் நிலைத்திருப்பீர்கள். அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும், அஞ்சலியுரை நிகழ்த்தியவர்களுக்கும் மற்றும் சகல விதங்களிலும் உதவியவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

29 - 11 - 94 (இன்று) நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இருபாலை கிழக்கு, இருபாலை

மனைவி
மைத்துனர்கள், மைத்துனிகள்,
பெறாமக்கள், உடன்பிறவா
சகோதரர்கள்,
பொன்னையா, கனகசபை

(சி-10797)

---

## நினைவு கூருகின்றோம்...

### 29.11.1994

1985-ம் ஆண்டு இதேதினத்தில் தென்மராட்சி, இருவையாறுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**அசோக்** (சிவரட்ணம் மேன்சொலமன் - இலங்கைராசன் - கெருடாவில், சாவகச்சேரி - யாழ்)

1987-ம் ஆண்டு தமிழகம் வேதாரணியம் பகுதியில் இந்திய கங்க இலாகாவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**கப்டன் றோகான்** (தங்கவடிவேல் மணிவண்ணன் - காட்டுவளவு - வல்வெட்டித்துறை)

யாழ் - டேவிற் வீதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் விழுப்புண்ணடைந்து சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சங்கரி** (தேவதாஸ் புவனேந்திரன்-புவனேந்திரன் வீதி, அத்தியடி - யாழ்ப்பாணம்)

இதே சமரில் வீரச்சாவெய்திய,

**வசி** (பிரபாகரன் சுதாகரன் - 9/2, 4-ம் குறுக்குத் தெரு - யாழ்ப்பாணம்)

யாழ் - சண்டிலிப்பாய் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**குலம்** (மார்க்கண்டு விந்தியானந்தன் - வீரமாணிக்கதேவன்துறை - மயிலிட்டி)

1991-ம் ஆண்டு மட்டு - கொடுவாமடுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**லெப். மாதவன் -முருகமூர்த்தி** (யோகராசா யுகேந்திரன் - நன்னாமுனை - மட்டு)

**லெப். புவிராஜ்** (அருணாசலம் தருமரட்ணம் - மாங்கேணி, வாழைச்சேனை - மட்டு)

**2-ம் லெப்.காங்கேயன் / றோயல் கவிசிலன்** (யோசப் எட்வேட் ஜோய் - செங்கலடி - மட்டு)

**தான்தோன்றி/ராஜன்** (ஜீ. அற்புதராசா - கல்லடி - மட்டு)

**துசன்** (ச. பஞ்சாயுதம் - சித்தாண்டி - மட்டு)

1992-ம் ஆண்டு மட்டு - மயிலவெட்டுவான் பகுதியில் ஆற்றில் மூழ்கியதில் எமைப்பிரிந்த.

**உதயபாரதி** (தெம்பரப்பிள்ளை கோகுலராஜ் - கல்முனை - அம்பாறை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10798)

---

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
30.10.1967

தாயக மண்ணில்
29.11.1987

### வீரவேங்கை வசி
(பிரபாகரன் சுதாகரன்)

குழந்தைப் பருவமுதல் கொஞ்சி விளையாடி
மலர்ந்த முகத்தோடு மனமுவந்து சீராட்டி
வளர்ந்த நிலைகண்டு மகிழ்ந்திருந்த வேளைதனில்
எமைவிட்டுப் பிரிந்து விட்டீர்.

இல 9/2
4-ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
அன்பு அம்மா,
சகோதரர்கள்

(10224)

---

## 65- ம் நாள் நினைவு | 9-ம் ஆண்டு நினைவு





**வீரவேங்கை குபேந்திரன்** (செல்லத்துரை செல்வரூபன்)

**இராமு செல்லத்துரை**

| பிறப்பு | வீரச்சாவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 13-03-1973 | 25-09-1994 | 18-01-1926 | 07-12-1985 |

எல்லையில்லாத இன்னுயிர் சுகந்தன்
வல்லதாயின் வடிவமான குபேந்திரன்
வீரப்பிறப்பிறப்பில் வித்தியாசமானவன்
சுன்னாகம் மேற்கின் சுதந்திர வீரன்

வல்லையில் ஆடினான் தொல்லைகள் தீர்க்க
வந்ததோ குண்டொன்று உன் உயிர் போக்க
பாச உறவுன்னை பார்த்திருக்கிறது
அன்னை மண் உன் வரவிற்காய் காத்திருக்கிறதோ

எல்லையில்லா சுதந்திர தாகம் - சுமந்த
இளம் பயிர் துடித்துறங்கியது
களத்தில் உனதுறவு கண்ணயராதது
கண் முன் வருவாய் எம்மண் காக்க.

29;11-1994 இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்விலும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகளையும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருவீதி, உரும்பிராய் வடக்கு. (10216)

அம்மா, அக்கா, அண்ணா, அண்ணி, மருமகள்

---


## WANTED - TEACHERS

ST. PATRICK'S COLLEGE, JAFFNA

A full - time teacher for

Primary: yrs. 1 to 5
Commerce: O/L & A/L Classes
Art: yr. 6 to yr. 11
Political Science: A/L

Retired teachers aged below 60 will also be considered.

Apply before 9th December 1994. Please quote Ref. No. 291294.

Applications after 9th Dec. 94 will not be entertained.

-Rector

(சி-10800)

# யாழ். மத்திய கல்லூரி உதைபந்தாட்ட நூற்றாண்டு விழா ஆட்டங்கள்

## - ஒரு கண்ணோட்டம் -

1894ம் ஆண்டில் யாழ் மத்திய கல்லூரியில்-இன்னொரு வகையில் கூறுவதானால் யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக உதைபந்தாட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந்த ஆண்டுடன் நூறு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இதனை நினைவு கூரும் வகையில் பிரபல கல்லூரிகளின் உதைபந்தாட்ட அணிகளுடன் யாழ் மத்திய கல்லூரியின் அணிகள் கலந்து கொண்ட சிநேகபூர்வ உதைபந்தாட்டத் தொடர் இடம் பெற்றன.

கடந்த மாதம் 7ம் திகதி தொடக்கம் 31ம் திகதி வரை பன்னிரண்டு பிரபல கல்லூரி அணிகளுடன் உதைபந்தாட்டப் போட்டிகள் இடம் பெற்றன. உதைபந்தாட்ட ரசிகர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்திருந்த இப்போட்டிகளைக் கண்டுகளிக்க கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் அவர்கள் பெருமளவில் கூடியிருந்தமை ஆட்டங்களின் சிறப்பை எடுத்துக் காட்டின. ஆட்டங்கள் அனைத்தும் மத்திய கல்லூரிமைதானத்தில் இடம் பெற்றன.

### நினைவுக் கேடயம் வழங்குதல்

இப்போட்டித் தொடரில் பங்கு பற்றிய ஒவ்வொரு கல்லூரிக்கும் நூற்றாண்டு நினைவுக் கேடயம் வழங்கப்பட்டமை இப்போட்டித் தொடரின் சிறப்பம்சமாகும். ஆட்டம் தொடங்கும் முன்னர் பங்குபற்றுகின்ற இரண்டு கல்லூரிகளினதும் கொடிகள் பரிமாற்றம் செய்யப்படும். பின்னர் அன்றைய ஆட்டத்தின் பிரதம விருந்தினர் நூற்றாண்டு விழா நினைவுக் கேடயத்தை யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை அவர்களிடம் வழங்குவார். அவர் அதனை மத்திய கல்லூரியின் முதலாம் அணியின் தலைவர் செல்வன் ஏ. பகிரதனிடம் வழங்குவார். அவர் அந்நினைவுக் கேடயத்தினை அன்றைய ஆட்டத்தின் எதிரணித் தலைவரிடம் வழங்க, அவர் அதனைப் பெற்றுக் கொண்டு தமது கல்லூரி அதிபரிடம் கையளிப்பார். இத்தகைய ஒரு நிகழ்வு ஒவ்வொரு கல்லூரியுடனான ஆட்டத்தின் போதும் இடம் பெற்றது.

### பங்குபற்றிய அணிகளும் ஆட்டங்களின் முடிவுகளும்

முதலாவது ஆட்டம் 7-10-94 அன்று சம்பத்திரிசியார் கல்லூரியுடன் இடம் பெற்றது. மிகவும் விறு விறுப்பாக அமைந்த இவ்வாட்டத்தில் மத்திய கல்லூரியின் மூன்றாவது அணி 1-0 என்ற வகையில் வெற்றி பெற்றது. ப. ஜோன்சன் இக்கோலைப் போட்டார். முதலாம், இரண்டாம் அணிகளுக்கிடையேயான ஆட்டங்களில் சம்பத்திரிசியார் அணிகள் 1-0என்ற வகையில் வெற்றி பெற்றன.

இரண்டாவது ஆட்டம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிகளுடன் இடம் பெற்றது இதில் மத்திய கல்லூரியின் மூன்று பிரிவு அணிகளும் வெற்றியைப் பெற்றுக் கொண்டன. முதல் பிரிவில் சுரேஷ், மோகனதாஸ் ஆகியோர் ஒவ்வொரு கோல்களைப் போட்டனர்.

மூன்றாவது ஆட்டத்தில் கனகரத்தினம் ம.ம.வி பங்குபற்றியது. இதில் அக்கல்லூரியின் இரண்டாவது பிரிவு அணி 3-1 என்ற வகையில் வெற்றி பெற ஏனைய பிரிவு ஆட்டங்கள் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தன. மத்திய கல்லூரியின் இரண்டாவது பிரிவு அணிக்காக புறாஸ்லி ஒரு கோலையும், மூன்றாம் பிரிவு அணிக்காக றோகன்குமார் ஒரு கோலையும் போட்டனர்.

நான்காவது போட்டியில் மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகளுடன் ஆடி மூன்று பிரிவிலும் வெற்றியீட்டியது. மத்திய கல்லூரியின் இரண்டாவது அணியின் தலைவர் கிளைமன்ற் இதில் நான்கு கோல்களைப்போட்டமை குறிப்பிடத்தக்கது.

ஐந்தாவது போட்டியில் மகாஜனா அணிகள் பங்கு பற்றின. இப்போட்டியிலும் சகல பிரிவுகளிலும் மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.



முதலாவது அணியில் சுரேஸ், கெஸ்ரன் ஆகியோரும் இரண்டாவது அணியில் முகுந்தனும், மூன்றாவது அணியில் கொன் மக்காரியசும் கோல்களைப் போட்டனர்.

ஆறாவது போட்டியில் இளவாலை புனித கென்றியரசர் அணிகளை மத்திய கல்லூரி எதிர்த்தாடியது விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது பிரிவில் எவரும் கோல் எதுவும் போடாமல் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இரண்டாவது பிரிவில் ஜோன்சன் போட்ட ஒரு கோலினால் மத்திய கல்லூரி வெற்றி பெற, மூன்றாவது பிரிவில் கென்றியரசர் கல்லூரி வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

ஏழாவது ஆட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் இடம் பெற்றது. இடம் பெற்ற இரண்டு பிரிவு ஆட்டங்களிலும் மத்திய கல்லூரியே வெற்றியீட்டியது. முதலாவது பிரிவில் டன்சன் சிறப்பாக ஆடி ஒரு கோல் போட்டார். இரண்டாவது பிரிவில் கண்ணன், முகுந்தன் ஆகியோர் சிறப்பாக ஆடிக் கோல்களைப் போட்டனர்.

எட்டாவது ஆட்டத்தில் பங்கு பற்றிய யாழ். இந்துக் கல்லூரியின் இரண்டு பிரிவு அணிகளில், இரண்டாவது பிரிவுக்கெதிரான ஆட்டத்தில் மத்திய கல்லூரி வெற்றி பெற, மூன்றாவது பிரிவுகளுக்கிடையேயான ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

**- சௌந்தர்**

அடுத்து யாழ்ப்பாணக் கல்லூரியின் மூன்று அணிகளுடனும் ஒன்பதாவது ஆட்டம் இடம் பெற்றது. முதலாம் பிரிவில் ஆட்டம் விறுவிறுப்பாக இடம் பெற்று எவரும் கோல் போடாமல் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. இரண்டாவது பிரிவிலும் மூன்றாவது பிரிவிலும் யாழ். மத்திய கல்லூரி வெற்றிகளையீட்டியது. கண்ணன், டிலான் ஆகியோர் கோல்களைப் போட்டு சிறப்பாக இதில் ஆடினர்.

ஆட்டத் தொடரின் பத்தாவது ஆட்டம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியு

(4ஆம் பக்கம் பார்க்க)

---

[ உதைபந்தாட்டப் போட்டி ]

# ஆசிய வெற்றிக்கிண்ணத்தை உஸ்பெஸ்கிஸ்தான் தட்டிச்சென்றது

12-வது ஆசிய விளையாட்டுப்போட்டிகள் யப்பானின் கிரோசிமா நகரில் நடைபெற்று முடிந்தபோது பல புதிய சாதனைகள் நிலை நாட்டப்பட்டிருந்தன. இதில் ஒன்றாக உதைபந்தாட்டமும் அமைந்துவிட்டது. இம்முறை ஆசிய உதைபந்தாட்டச் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட நாடு உஸ்பெஸ்கிஸ் தான் (முன்னைய யூ. எஸ். எஸ். ஆரின் ஒரு அங்கம்)

உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்ட நாடுகள் மிகக்குறைவே. 18 நாடுகள் மட்டுமே கலந்துகொண்டன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை யப்பான், சீனா, தென்.கொரியா, சவூதிஅரேபியா, மற்றும் ஈரான். கட்டார் போன்றவையும் பலமானவையே. தென். கொரியா, யப்பான் சீனா மூன்று நாட்டுக்கும் விளையாட்டுக்கு மேலாக அரசியல் பொருளாதார மேலாண்மை நோக்கம் கலந்ததாக இப்போட்டி அமைந்தது. அதோடு யப்பான் ஆசியப் போட்டிகளை நடாத்தும் நாடென்பதாலும் 2002ல் உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளை நடாத்தும் வாய்ப்பைப்பெற முயற்சிப்பதாலும் தென்கொரியாவும் இதே அபிலாசையைக் கொண்டிருப்பதாலும் இரண்டும் பலமிக்க அணிகளையே தெரிவு செய்திருந்தன. இதேவேளை மாறாக சவூதி அரேபியா தன் உலகக்கிண்ண அணிக்கு மாறாக, பயிற்சார்த்தக் குழுவொன்றையே அனுப்பியிருந்தது. ஏனைய நாடுகள் எல்லாம் முழுமை நிறைந்த அணிகளை அனுப்பியிருந்தன. இவற்றுள் இரண்டு புதிதாகப் பிறந்த நாடுகள் ஒன்று துர்க்மினிஸ்தான். மற்றது உஸ்பெஸ்கிஸ்தான்.

எல்லா நாடுகளும் தங்கப் பதக்கத்தை நோக்கமாகவே கொண்டிருந்தாலும்கூட உஸ்பெஸ்கிஸ்தான் அதிர்ச்சிதரும் வகையில் ஏனையோரைப்பின் தள்ளும் என எவரும் எதிர் பார்க்கவில்லை எனினும் ஆசிய உதைபந்தாட்டப் போட்டிகள் எவ்வகையிலும் சர்வதேசத்தரத்தில் அமையாமை ஏமாற்றமாகும் என்கிறார் ஒரு விமர்சகர். அவர் மேலும் கூறுகையில் கலந்து கொண்ட 18 நாடுகளில் 14 நாடுகளின் பயிற்றுநர்கள் வெளி நாட்டவர்கள் என்கிறார். இப்படியிருந்தும் கூட ஏன் தரம் வீழ்ந்தது என்பது புரியவில்லை என்கின்றார்.

மறுவளமாக சாம்பியன் உஸ்பெஸ்கிஸ்தான் பற்றிக் கூறும் போது யப்பானியரின் விளையாட்டுச் சாதுரியமோ சுலபமாக ஆடும் கொரியப் பாங்கோ, சவூதி, அல்லது சீனாவின் ஆக்ரோஷமோ உஸ்பெஸ்கிஸ்தானிடம் இருக்கவில்லை தான். ஆனால் அவர்கள் திட்டமிட்ட விளையாட்டுப் பாங்கும் தொடரான தீவிரத்தன்மை பொருந்திய விளையாட்டும், மிக முக்கியமாக முடிக்கும் திறனும் (FINISHING)தான் அவர்களின் வெற்றிக்குக்காரணம் என்கிறார். உஸ்பெஸ்கிஸ்தான் தான் ஆடிய 7 ஆட்டங்களிலும் தொடராகவே வெற்றி கண்டுள்ளது தன் குழுவில்சவூதிஅரேபியா,மலேசியா, கொங்கொங், தாய்லாந்து நாடுகளை வென்று கால் இறுதி ஆட்டத்தில் துர்க்மினிஸ்தானை 3 - 0 என்றவாறு வெற்றி கண்டு அரை இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது. ஏனைய கால் இறுதி ஆட்டங்களில் குவைத் - ஐக்கிய அரபு எமிரேட்சை 2 - 1 என்றும் கொரியா, யப்பானை 3-2 என்றும் சீனா, சவூதிஅரேபியாவை 2-0 என்றும் வென்றன.

அரை இறுதி ஆட்டத்தில் சீனா குவைத்தை 2-0 என்றும் கொரியாவை உஸ்பெஸ்கிஸ்தான் 0-1 என்றவாறும் வெற்றிகண்டு சீனாவும், உஸ்பெஸ்கிஸ்தானும் இறுதியாட்டத்திற்குத்தகுதிபெற்றன. இறுதி ஆட்டத்தில் 4-3 என்றவாறு உஸ்பெஸ்கிஸ்தான் புதியதொரு ஆசிய உதைபந்தாட்டச்சக்தியாக தன்னை நிரூபித்தது. ஆனாலும் உஸ்பெஸ்கிஸ்தான் தான் வென்ற 7 ஆட்டங்களிலும் மறக்க

**நிர்மலன்**

முடியாத ஆட்டமென்றவகையில் கொரியாவை 1-0 என்றவாறு தோற்கடித்ததையே குறிப்பிடக்கூடும். ஏனெனில் கொரிய முன்வரிசை வீரர்கட்கும், உஸ்பெஸ்கிஸ்தான் கோல்காப்பு வீரர் யூரி சீக்சினுக்கும் இடையில் நடைபெற்ற பெரும் பலப்பரீட்சையென்றே இதனை விமர்சகர்கள் வர்ணிக்கிறார்கள். இதில் நிறையவே நியாயம் உண்டு. ஏனெனில் உலகக்கிண்ணம் 94 ஜேர்மனி - தென்கொரியப் போட்டியொன்றில் பின் அரைப் பகுதியில்தென் கொரிய வீரர்கள் முன்னை நாள் உலக

(4 ஆம் பக்கம் பார்க்க)

---

# விளையாட்டு அரங்கு

---

[ பரபரப்பான பம்பாய் டெஸ்ட் போட்டி ]

# மே.இந்தியதீவுகள் அணியை இந்திய அணி வென்றது

அண்மையில் இந்தியாவிற்கும் மேற்கிந்தியாவிற்கும் பம்பாயில் நடந்து முடிந்த முதலாவது கிரிக்கெட் போட்டி மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது. இரண்டு நாடுகளும் ஒன்றுக்கு ஒன்று சளைத்தவை இல்லை என்பதை நிரூபித்தன. எப்படி இருந்தாலும் மேற்கிந்தியா இறுதியில் தோல்வியை தழுவ வேண்டி ஏற்பட்டது. மைதானத்தை பொறுத்தவரையில் வேகப் பந்து வீச்சாளருக்கு கை கொடுக்க கூடியதாக அமைந்தது. இந்திய துடுப்பாட்ட வீரர்கள் எல்லாம் மைதானத்தை குறை கூறுகிறார்கள். அதே போன்று தான் மேற்கிந்திய வீரர்கள் ஒருசிலரும் மைதானத்தை குறை கூறுகின்றனர் எது எப்படி இருந்தாலும் மைதானத்தில் மாத்திரம் குறை கூற முடியாது.

**நீர்வை இ. பாலச்சந்திரன் (ரகு)**
யாழ். மத்திய கல்லூரி

பூவா,தலையாபார்ப்பதில் வெற்றி பெற்ற அஸாருதீன் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார் இதில் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால் மேற்கிந்தியாவின் வீரர்களான தனராஜ் மற்றும் கம்பி ஆகியோர் தமது கிரிக்கெட் வரலாற்றில்முதலாவது டெஸ்ற் போட்டியில் விளையாடிய பெருமையை இப்போட்டியின் மூலம் பெற்றுக் கொண்டார்கள். இந்தியாவின் ஆட்டத்தை பிரபாகரும் சித்துவும் தொடக்கினர் ஓட்டம் எதுவும் எடுக்காத நிலையில் கொட்னிவோல்ஷ் வீசிய முதல் ஓவரில் இரண்டாவது பந்தில் பிரபாகர் ஆட்டம் இழந்தார். பின்பு உள்ளே நுழைந்தவர் கம்ளி வந்த வேகத்தில் மிக விரைவாக 39 பந்துகளில் 40 ஓட்டங்களை பெற்று பெஞ்சமினின் பந்து வீச்சில் ஆட்டம் இழந்தார். பின்பு டெண்டுல்காரும் சித்துவும் சேர்ந்து மெதுவாக ஓட்டங்களை சேகரிக்க தொடங்கினர் 18 ஓட்டம் எடுத்த நிலையில் வோல்ஸின் பந்து வீச்சில் சித்து ஆட்டம் இழந்தார். பின்பு டெண்டுல்கார் 34 ஓட்டங்களுடனும் அஸாருதீன் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் வோல்ஸின் பந்துவீச்சில் ஆட்டம் இழந்தனர். 5 இலக்கு இழப்பிற்கு 99 என்ற நிலையில் இருந்த போது உள்ளே நுழைந்தவர் மோங்கியா. இந்தியாவின் இம் மோசமான நிலையில் இருந்து சஞ்சே மஞ்சிரேக்கருடன் இணைந்து ஓர் அளவு கட்டி எழுப்பினர். இவர்கள் இருவர் இணைந்து 6 வது இலக்குச் சோடியாக 136 ஓட்டங்களை சேகரித்தனர் மஞ்சிரேக்கர் 51 ஓட்டம் எடுத்த நிலையில் தனராஜின் பந்துவீச்சில் ஆட்டம் இழந்தார். பின்பு கும்ப்ளேயும், மோங்கியாவும் இணைந்து இந்தியாவின் எண்ணிக்கையை 262 என்ற நிலைக்கு வந்தபோது மோங்கியா 80 ஓட்டம் எடுத்த நிலையில் வோல்ஸின் பந்து வீச்சில் ஆட்டம் இழந்தார். பின்பு இந்தியாவின் மிகுதி இலக்குகள் 10 ஓட்டங்களுக்குள் மளமளவென சரிந்தது. மொத்தம் 272 ஓட்டங்களைத்தான் முதலாவது இனிங்சில் இந்தியாவால் எடுக்கமுடிந்தது. பந்து வீச்சில் வோல்ஸ் 6 இலக்குகளையும் பெஞ்சமின் 3 இலக்குகளையும் தனராஜ் தனது முதலாவது டெஸ்ற் இலக்கையும் வீழ்த்தினர்.

தனது ஆட்டத்தை தொடங்கிய மேற்கிந்தியா ஓரளவு சிறப்பாக தொடங்கியது எனலாம். சிமன்ஸ் 19 ஓட்டங்கள் எடுத்தநிலையில் சிறிநாத்தின் பந்துவீச்சில் ஆட்டம் இழந்தார். பின்பு உள்ளே நுழைந்த லாறா வில்லியத்துடன் இணைந்து ஓட்டங்களைச் சேகரிக்க தொடங்கினர். மொத்தம் 84 ஓட்டம் என்ற நிலையில் இருந்தபோது ராஜுவின்பந்து வீச்சு இலக்கு சாய்ந்து 14 ஓட்டங்களுடன் லாறா ஆட்டம் இழந்தார். பின்பு வந்த கூப்பர் மிகவிரைவாக 17 பந்துகளில் 29 ஓட்டங்களை பெற்று சௌகானின் பந்து வீச்சில் ஆட்டம் இழந்தார். அணியின் நிலை 136 என்ற நிலையில் இருந்த போது வில்லியம் 49 ஓட்டங்களுடன் ராஜுவின் பந்து வீச்சில் ஆட்டம் இழந்தார் பின்பு ஜிமி அடம்சும் அத்தட்டனும் இணைந்து அணியின் நிலையை 200 ஓட்டங்களுடன் கிட்ட கொண்டு வரும் போது கம்ளியின் பந்து வீச்சில் அத்தட்டன் 40 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். யூனியர் மறே மிக விரைவாக அடித்து 23 ஓட்டங்கள் பெற்று இருந்த போது ராஜுவின் பந்துவீச்சில் ஆட்டம் இழந்தார். அப்போது அணியின் நிலை 230 ஓட்டங்கள். மிகுதி இலக்குகள் 13 ஓட்டங்களுக்குள் மளமளவென சரிந்தது.மேற்கிந்தியா மொத்தம் 243 ஓட்டங்களுக்கு முதல் இனிங்சை இழந்தது. பந்துவீச்சில் வெங்கடபதி ராஜு 5 இலக்கையும் கம்ளி 3 இலக்கையும், சிறிநாத், சௌகான் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

மேற்கிந்தியாவை விட மொத்தம் 29 ஓட்டங்கள் கூடுதலாக உள்ளது என்ற பெருமையுடன் தனது இரண்டாவது இனிங்சை ஆடத் தொடங்கிய இந்தியா. மிகவும் இக்கட்டான நிலைக்குதள்ளப்பட்டது. வோல்ஸ் வீசிய முதல் ஓவரில் முதல் பந்தில் பிரபாகர் கொடுத்த பிடியை வோல்ஸ் தவறவிட்டார். மொத்தம் 11 ஓட்டம் எடுத்த நிலையில் பெஞ்சமினின் பந்து வீச்சில் கூப்பரிடம் பிடிகொடுத்து 7 ஓட்டங்களுடன் பிரபாகர் ஆட்டம் இழந்தார். பின்பு வந்த மோங்கியாபெஞ்சமினின்பந்து வீச்சில் அடம்ஸிடம் பிடி கொடுத்து ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டம் இழந்தார் அடுத்து வந்த கம்ளி பெஞ்சமினின் பந்து வீச்சில் கூப்பரிடம் பிடிகொடுத்து ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டம் இழந்தார் மொத்தம் 11 ஓட்டம் என்றநிலையில் முதல் மூன்று இலக்கையும் பறிகொடுத்து மிகவும் இக்கட்டான நிலையில் இந்தியா இருந்தது. டெண்டுல்காரும் சித்துவும் இணைந்து மெதுவாக ஓட்டம் சேகரித்த போது மொத்தம் 44 ஓட்டம் என்ற நிலையில் பெஞ்ச

(4 ஆம் பக்கம் பார்க்க)

---

# ஒரு சகாப்தத்தின் நிறைவில் - கரபந்தாட்டம் -

### கரபந்தாட்டத்தின் தோற்றம்

வானில் மிதக்கும் பந்தினை கரங்களால் திசைப்படுத்தி திறம்படுத்துவதே கரபந்தாட்டம். இது முதலில் வலைக்கு மேலால் பந்தினை எறிந்து பரிமாறிக் கொள்வதாகவே இருந்தது.

1895ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஹோலயோர்க் நகரில் வில்லியம் ஜே. மோர்கன் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டபோதும் இதற்கான சட்டதிட்டங்கள் 1896 இல் வகுக்கப்பட்டு கைப்பந்தாட்டமென பெயர்சூட்டப்பட்டது. இதன் பின்னர் 1947 இல் கரபந்தாட்டச் சங்கமொன்று உலகளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது. இதில் குறைந்த எண்ணிக்கையான நாடுகளே அங்கம் வகித்தன. இன்று 175 ற்கு மேற்பட்ட நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன.

இதன் அடிப்படையில் 1949 ஆம் ஆண்டு சர்வதேச மட்ட ஆண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியொன்று நடாத்தப்பட்டது.அவ்வாறே 1952 ஆம் ஆண்டு பெண்களுக்கான சர்வதேச மட்ட கரபந்தாட்டப் போட்டியும் நடைபெற்றது. வெவ்வேறு ஆண்டுகளில் நடைபெற்ற இவ்விரு போட்டிகளிலும் யூ. எஸ். எஸ். ஆர். வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது. 1964 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் ஒன்றாக சேர்க்கப்பட்ட இக்கரபந்தாட்டமானது 1916 ஆம் ஆண்டில் இலங்கையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இவ்வாட்டத்தை உலகின் பல்வேறு பாகங்களில் தோற்றுவித்து போட்டிகளுக்கான பயிற்சிகளை வழங்குவதற்காக உலகை ஐந்து வலயங்களாகப் பிரித்தார்கள். 1. ஆசிய வலயம்: 2. ஐரோப்பிய வலயம், 3. வட மத்திய அமெரிக்க வலயம். 4. தென் அமெரிக்க வலயம், 5. ஆபிரிக்க மடகாஸ்கர் வலயம் என வகுக்கப்பட்ட வலயங்களில் பயிற்சிகள் துறைதோய்ந்த வல்லுநர்களால் அளிக்கப்பட்டன.

### அளவுத் திட்டங்கள்

விளையாடும் முற்றமும்: கம்பமும், வலையும், பந்தையும் உபகரணங்களாகக் கொண்ட இவ் விளையாட்டிற்கு 18 மீற்றர் நீளமும், 9மீற்றர் அகலமும் கொண்ட இருபக்க முற்றம் தேவைப்படும். இதற்கு மேலதிகமாக சுயாதீனப் பிரதேசம் எனப்படும் பகுதி 3 மீற்றருக்குக் குறையாதிருக்கும். கம்ப உயரமானது வயது வேறுபாட்டிற்கும், பால் வேறுபாட்டிற்கும் ஏற்ப வித்தியாசப்பட்டிருக்கும். 15 வயது ஆண்களுக்கு 7 அடி 6 அங்குலமும், பெண்களுக்கு 7 அடியாகவும். 17 வயது ஆண்களுக்கு 7 அடி 10 அங்குலமாகவும், பெண்களுக்கு 7 அடி 2 அங்குலமும், 19 வயது ஆண்களுக்கு 7 அடி 11 5/8 அங்குலமும், பெண்களுக்கு 7 அடி 4 1 8 அங்குலமாகவும் இருக்கும். பொதுவான ஆண்களுக்கும் பெண்களுக்கும் 19 வயதுப் பிரிவினரின் அளவே பொருத்தமானதாகும். அடுத்து வலையானது, 10ச. மீ. × 10 ச. மீ. உடைய சதுரங்களைக் கொண்ட 9.5 மீற்றர் நீளமும், 1 மீற்றர் அகலமும் உடையதாக இருக்கும். பந்தைப் பொறுத்தவரையில் 66.67 ச. மீ. சுற்றளவுடையதாகவும், 260 கிராம் - 280 கிராம் நிறையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

### வளர்ச்சியும், பிரச்சினைகளும்

உலகிலேயே உதைபந்தாட்டத்திற்கு அடுத்ததாகக் கருதப்படுகின்ற இக்கரபந்தாட்டமானது எமது பிரதேசத்தில் பாடசாலை மட்டத்திலும், கழக மட்டத்திலும் பரபல்யம் வாய்ந்ததாக இன்று விளங்குகின்றது. பாடசாலைகளில் சமமான குழுக்களுக்கிடையே போட்டிகளை நடாத்தி பின் தெரிவு செய்யப்படும் வீரர்களைக் கொண்ட அணியை கோட்ட மட்டத்திலான போட்டியிலும், வலய மட்டத்திலான போட்டியிலும், மாவட்ட மட்டப் போட்டியிலும், பின்னர் தேசிய மட்டப் போட்டியிலும் பங்குகொள்ளச் செய்ய முடியும். அதுபோன்று கழகங்களுக்கிடையே ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் போட்டிகளை நடாத்தித் தெரிவு செய்யப்படும் அணிகளை மாவட்ட நிலைக்கு அழைத்துச் சென்று பின்னர் தேசிய மட்டத்திற்கு அனுப்ப முடியும்.

இன்று யாழ்ப்பாணத்தில் இவ்வாட்டத்திற்கான விருப்பு பெருகியிருப்பது குறிப்பிட வேண்டியது. பாடசாலை மட்டமென்றாலும் சரி, கழக மட்டங்களானாலும் சரி சர்வதேச விதிமுறைகளை அனுச

**- சரா. புவனேஸ்வரன்**

ரித்து ஆடுகின்ற அளவிற்கு வளர்ந்திருப்பது பெருமை தருகின்றது. பாடசாலை மட்டங்களில் குறிப்பிடக் கூடிய பிரபல்யம் வாய்ந்த பாடசாலைகளில் வலுவுள்ள அணிகள் இருப்பது மகிழ்வுக்குரிய விடயம். எத்தனையோ முன்னணிப் பாடசாலைகளில் உடற்கல்விக்கெனப் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லாத போதும் ஸ்ரீலங்கா அரசினால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட உடற்கல்வி ஆசிரிய பயிற்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

# A/L பொருளியல் - II

## பயிற்சிப் பரீட்சை

நேரம் - 3 மணித்தியாலம்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக

1. i) பாதீடு, பாதீட்டுப் பூட்கை என்ற எண்ணக் கருக்களிற்கு விளக்கம் தருக.
ii) பொதுப் பண்டங்களின் முக்கிய இயல்புகள் யாவை?
iii) குடித்தனத் துறையில் நிலவும் பொருளாதார சமமின்மையைக் குறைப்பதற்கு வரவு செலவுத்திட்டம் எவ்வகையில் பங்களிப்பைச் செய்யலாம்?
iv) வளர்ச்சிக் குறிக்கோளை எய்துவதற்கு வரவு செலவுத் திட்டத்தினூடாக மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் யாவை?
(ஒவ்வொரு பிரிவுக்கும் 05புள்ளிகள்)

2. i) அ. வரி என்பதற்கு வரைவிலக்கணம் தருக?
ஆ. வரிவிதிப்பதன் நோக்கங்கள் யாவை?
இ. நல்ல வரிமுறையின் இயல்புகள் யாவை?
ii) அ. ''சேர்க்கப்பட்ட பெறுமதியின் மீதான வரி'' (**Value Added Tax- VAT**) என்பதற்கு விளக்கம் தருக.
ஆ. அண்மை ஆண்டுகளில் இலங்கையின் மொத்த அரசிறையில் சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரிகளின் முக்கியத்துவம் யாது?
இ. அண்மை ஆண்டுகளில் அதன் பங்களிப்பின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த முக்கிய காரணிகள் யாவை?
(ஒவ்வொரு பிரிவுக்கும் 10 புள்ளிகள்)

3. i) அ. நேர்வரி, நேரில்வரி என்பவற்றை வேறுபடுத்துக.
ஆ. இலங்கையின் பிரதான வரிவகைகளை மேற்கூறப்பட்ட வகையில் பாகுபடுத்திக் காட்டுக.
ii) இலங்கையின் அரசிறையில் நேர்வரிகளின் பங்களிப்புக் குறைவாக இருப்பதற்குரியகாரணங்கள் யாவை?
iii) ''நேரில் வரிகளின் விளைவுகள் தேய்வானவை'' எனக் குறைகூறப்படுவதேன்? இக் குறைபாட்டை நீக்குவதற்கு நேரில்வரிகளை எவ்வாறு பயன்படுத்தலாம்?
iv) இலங்கையின் மொத்த அரசிறையில் வரியல்லா அரசிறையின் பங்களிப்பு யாது? இவ் வரியல்லா அரசிறையின் முக்கிய மூலங்களை வகைப்படுத்திக் காட்டுக.
(ஒவ்வொரு பிரிவுக்கும் 05 புள்ளிகள்)

4. i) அ. அரச நடைமுறைச் செலவின் பொருளியல் அடிப்படையிலான முக்கிய வகுதிகள் யாவை?
ஆ. இலங்கை அரசின் மொத்தச்செலவில் நடைமுறைச் செலவின் பங்கு யாது?
இ. வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள அகதிகள் மீதான செலவு, அரச செலவினங்களில் எந்த உபபிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றவை?
ஈ. ஓய்வூதியங்களை மாற்றல் கொடுப்பனவுகளாகக் கருதுவதற்கான காரணங்கள் யாவை?
ii) அ. அரச செலவின் தொழிற்பாட்டு அடிப்படையிலான பகுப்பில், பொருளாதாரப்பணிகள் என்பதன் கீழ் எவற்றை உள்ளடக்குவீர்?
ஆ. தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்கம் பெற்றுக் கொண்ட தொகை, வரவு செலவுத்திட்டத்தில் எவ்வகையில் காட்டப்படுகிறது?
(ஒவ்வொரு பிரிவுக்கும் 10 புள்ளிகள்)

5. 1994 ஆம் ஆண்டிற்கான அரசாங்க வரவு செலவுத்திட்டத்திலிருந்து பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்பட்டுள்ளன.
(சகல தொகைகளும் மில்லியன் ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)

| | |
|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் | 123000 |
| வரியல்லா அரசிறை | 10000 |
| வெளிநாட்டுக் கொடைகள் | 8000 |
| மூலதனச் செலவு | 35000 |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 21000 |
| மீள்கொடுப்பனவுகள்கழித்தகடன்வழங்கல் | 10000 |
| தொழில் முயற்சிகளுக்கான கடன்வழங்கல் | 12000 |
| முற்பணக்கணக்குகள் மூலமான தேறிய கடன் வழங்கல் | 250 |
| நடைமுறைச் செலவு | 109000 |
| வெளிநாட்டுக் கடன் | 18000 |
| உள்நாட்டுச்சந்தையில் வங்கியல்லாக்கடன் | 13000 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
i) அரசாங்க சேமிப்பு
ii) அ. மொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை
ஆ. படுகடன் மூலம் நிதிநிரப்பப்படும் பற்றாக்குறை
iii) அ. அரசமுதலீடு
ஆ. மூலதன மாற்றல்கள்
iv) அ. மொத்த அரசிறையில் வரி அரசிறையின் பங்கு
ஆ. மொத்தப் பற்றாக்குறையில் வெளிநாட்டு மூலவளங்களின் பங்கு
(ஒவ்வொரு பிரிவுக்கும் 05 புள்ளிகள்)

6. i) பொதுப்படுகடன் என்பதன் கருத்துயாது?
ii) ''1993இல் இலங்கையின் பொதுப்படுகடன் பணிவீதம் 57சதவீதமாகும்'' இக்கூற்றிலிருந்து நீர் விளங்கிக் கொள்வதுயாது?
iii) அ. வெளிநாட்டுக்கொடை, வெளிநாட்டுக் கடன் இரண்டையும் வேறுபடுத்துக.
ஆ. இலங்கைக்குக் கொடைவழங்கும் முக்கிய மூலங்கள் இரண்டு தருக.
iv) அ. படுகடனின் உடைமை அடிப்படையில் இலங்கை பெற்றுக்கொள்ளும் வெளிநாட்டுப் படுகடனை வகைப்படுத்துக.
ஆ. மேற்காட்டப்பட்ட பாகுபாட்டினை சலுகைக்கடன், வர்த்தகக்கடன் என்றபாகுபாட்டுடன் எவ்வாறு இணக்கம் செய்வீர்?
இ. அண்மையாண்டுகளில் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடனில் சலுகைக் கடனின் பங்கு யாது?
(ஒவ்வொரு பிரிவுக்கும் 05 புள்ளிகள்)

7. i) கருதுகோள் முறையான தரவுகளைப் பயன்படுத்தி சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு மாதிரி அமைப்பைத் தயாரிக்க.
ii) சென்மதிநிலுவை அட்டவணையிலுள்ள ''நாணயமல்லா மூலதனம்'' என்பதனால் கருதப்படுவது யாது? அதில் உள்ளடங்கும் விடயங்கள் யாவை?
iii) சென்மதி நிலுவை அட்டவணையிலுள்ள எவ் விடயங்கள் தேசியக்கணக்கீட்டில் மொத்த உள்நாட்டுற்பத்திக்கும் மொத்தத்தேசிய உற்பத்திக்குமிடையில் வேறுபாட்டை ஏற்படுத்துகின்றன?
iv) அ. இலங்கையில் சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கு 1981இற்குப்பின் முதல் முறையாக 1993இல் மிகையொன்றினைப் (31 மில்லியன் **SDR**) பதிவு செய்துள்ளது. இத்தகைய முன்னேற்றத்திற்கு உதவிய காரணிகள் யாவை?
ஆ. 'இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் பணி விகிதம் 1989-1993 காலப்பகுதியில் 24.6 சதவீதத்திலிருந்து 13.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது' இக் கூற்றுப்பற்றிய உமது கருத்து யாது?
(ஒவ்வொரு பிரிவுக்கும் 05 புள்ளிகள்)

8. i) சென்மதி நிலுவைப்பிரச்சினை என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
ii) சென்மதி நிலுவைப் பிரச்சினையை ஏற்படுத்தும் காரணிகளைப் பகுப்பாய்வு செய்க.
iii) சென்மதிநிலுவைப் பிரச்சினையைத் தீர்ப்பதில் நாணய மதிப்பிறக்கம் சிறந்த வழிமுறையாக அமைய வேண்டுமாயின் குறிப்பிட்ட நாட்டில் எத்தகைய நிலைமைகள் காணப்பட வேண்டும்?
iv) 1993இல் இலங்கையின் சென்மதிநிலுவையின் மொத்தநிலுவை முன்னெப்பொழுதும் அடையப்படாத உயர்ந்த மிகையை (375 மில்லியன் **SDR**) கொண்டிருந்தது. இத்தகைய மிகை நிலையொன்றின் பொருளாதார விளைவுகள் யாவை?
(ஒவ்வொரு பிரிவுக்கும் 05 புள்ளிகள்)

9. i) வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுவதன் மூலம் ஒருநாடு பெறக்கூடிய அனுகூலங்கள் யாவை?
ii) அண்மை ஆண்டுகளில் இலங்கையினது ஏற்றுமதியமைப்பைச் சுருக்கமாகப் பரிசீலனை செய்க.
iii) அ. அண்மை ஆண்டுகளில் இலங்கையின் மொத்த இறக்குமதிகளில் இடைநிலைப் பொருட்களின் முக்கியத்துவம் யாது?
ஆ. இலங்கை இறக்குமதி செய்யும் இடைநிலைப்பொருட்களின் முக்கிய வகுதிகள் யாவை?
iv) 'இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் (1985=100) 1991இல் 86 இலிருந்து 1993இல் 91ஆக அதிகரித்திருந்தது' இக்கூற்றினால் கருதப்படுவது யாது?
(ஒவ்வொரு பிரிவுக்கும் 05 புள்ளிகள்)

10. பின்வருபவைகளுள் நான்கிறுக்குச் சிறுகுறிப்புகள் எழுதுக.
i) வளமாக்கி உதவு தொகை
ii) ரூபாப் பிணைகள்
iii) வெளிநாட்டு இணைக்கிணை நிதியம்
iv) இலங்கையில் பாதுகாப்புச் செலவின் அதிகரிப்பு
v) தேசிய அபிவிருத்திச்சபை (**National Development Council - NDC**)
vi) உலக வர்த்தக நிறுவனம் (**World Trade Organization - WTO**)
(ஒவ்வொரு பிரிவுக்கும் 05 புள்ளிகள்)

★ இவற்றிற்குரிய விடைக்குறிப்புக்களும், புள்ளி வழங்கும் முறையும் அடுத்தவார மாணவர் அரங்கில் வெளியிடப்படும்.

வே. கருணாகரன்
(B. A. Hons, Dip in Ed.)

# மே. இந்திய தீவுகள்......

மியின் பந்து வீச்சில் சித்து 12 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார் பின்புவந்த அஸாருதின் 17 ஓட்டம் எடுத்த நிலையில் கூப்பரின் பந்து வீச்சில் ஆட்டம் இழந்தார். மிகவும் இறுக்கமான நிலையில் இருந்த இந்தியாவை மஞ்சிரேக்கரும் டெண்டுல்காரும் ஓர் அளவு கட்டி எழுப்பினர். 85 ஓட்டம் எடுத்த நிலையில் டெண்டுல்கார் கூப்பரின் பந்து வீச்சில் மறேயிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார் அப்போது அணியின் நிலை 162 ஓட்டமாக இருந்தது. இவர்கள் இருவரும் இணைந்து 6 வது இலக்கச் சோடியாக 78 ஓட்டங்களை சேகரித்தனர். பின்பு வந்த கம்ளி மிக விரைவாக 43 ஓட்டங்களை எடுத்த போது கஃபியின் பந்துவீச்சில் கூப்பரிடம் பிடிகொடுத்துஆட்டம் இழந்தார். இந்த இலக்கின் மூலம் தனது முதலாவது டெஸ்ட் இலக்கை வீழ்த்தினார் கஃபி மஞ்சிரேக்கரும் கம்ளியும் இணைந்து 7 வது இலக்குச் சோடியாக 75 ஓட்டங்களை சேகரித்தனர் பின்பு மஞ்சிரேக்கர் 66 ஓட்டம் எடுத்த நிலையில் வோஸ்சின் பந்து வீச்சில் ஆட்டம் இழந்தார். பின்பு வந்த சிறிநாத் சௌகானுடன் இணைந்து வேகமாக ஓட்டங்களை சேகரித்தனர் 313 ஓட்டம் என்ற நிலையில் இருந்த போது வோஸ்சின் பந்துவீச்சில் சௌகான் ஆட்டம் இழந்தார். பின்பு ராஜூவும் சிறிநாத்தும் இணைந்து அணியின் நிலையை 333 என்ற நிலைக்கு கொண்டு வந்த போது தனராஜின் பந்து வீச்சில் மறேயால் ஸ்டம்ப்செய்யப்பட்டு சிறிநாத் இலக்குச்சரிந்தது. அவர் பெற்ற ஓட்டங்கள் 60 இவை 66 பந்துகளில் பெறப்பட்டது இதுவே இவருடைய அதிகூடியஓட்டமாகும். ராஜூ 4 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காமல் இருந்தார். பந்து வீச்சில் பெஞ்சமின் 4 இலக்கையும் கூப்பர் வோஸ் தலா இரண்டையும் தனராஜ் கஃபி தலா ஒன்றையும் வீழ்த்தினர்.

363 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்சை தொடங்கியது மேற்கிந்தியா. இந்தியாவின் தரப்பில் முதல் ஓவரை பிரபாகர் ஆரம்பித்தார். முதல்பந்தேமுறை தவறிய பந்தாகஅமைந்தது இரண்டாவது பந்தில் மோங்கியாவிடம் பிடிகொடுத்து சிமின்ஸ் ஆட்டம் இழந்தார். பின்பு வந்த லாறா மூன்றுபந்தை தடுத்து ஆடியவர் நாலாவது பந்தை அடிக்கமுற்பட்ட போது மட்டையின் விளிம்பில் பட்டு இலக்கை சாய்த்தது. 2 ஓட்டம் 2 இலக்கு என்று முதல் ஓவரில் மிகவும் மோசமான நிலையில் மேற்கிந்தியா இருந்தது பின்பு கூப்பரும் வில்லியமும் இணைந்து ஓட்டங்களை சேகரித்த போது சிறிநாத்தின் பந்துவீச்சில் 11 ஓட்டங்களுடன் வில்லியம் ஆட்டம் இழக்க அணியின் எண்ணிக்கை 26 ஓட்டங்கள் என்று இருந்தது. பின்பு வந்த அத்தட்டன் நிதானமாக நிற்க கூப்பர் 27 ஓட்டம் எடுத்த நிலையில் சிறிநாத்தின் பந்துவீச்சில் மோங்கியாவிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார். அப்பொழுது அணியின் எண்ணிக்கை48 ஓட்டங்களாக இருந்தது. அத்தட்டன் எதிர்பாராத விதமாக ராஜூவின் பந்துவீச்சில் ஆட்டம் இழக்க அணியின் எண்ணிக்கை 5 இலக்கு இழப்பிற்கு 81 என்று மிக மிக மோசமான நிலையில் இருந்தது. முன்னணி வீரர்கள் ஆட்டம் இழந்ததால் இந்தியாவின் வெற்றி உறுதியாக இருந்தது. பின்பு 6 வது இலக்கு சோடியாக ஆடிய அடமும், மறேயும் ஆடிய ஆட்டத்தால் இந்தியாவின் உறுதி தளரத் தொடங்கியது என்று கூறலாம். இவர்கள் இருவரும் இணைந்து இந்தியாவின் அனைத்து பந்து வீச்சாளர்களையும் மடக்கி ஓட்டங்களை மிகவேகமாக குவித்தனர். 84 ஓட்டம் எடுத்த நிலையில் சௌகானின் பந்து வீச்சில் இலக்கு சரிந்து மறே ஆட்டம் இழக்க அணியின் நிலை 6 இலக்கு இழப்பிற்கு 244 ஓட்டம் என்று இருந்தது 6 வது இலக்கு சோடியாக இவர்கள் இருவரும் இணைந்து 163 ஓட்டங்களை சேகரித்தனர். சிறிநாத் வீசிய அடுத்த ஓவரில் அடம்ஸ் 81 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். இந்தியாவின் வெற்றி மிகவும் பிரகாசமாக தெரிந்தது. பின்பு பெஞ்சமின் ராஜூவின் பந்துவீச்சில் அஸாருதீனிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழக்க 252/8 இலக்கு இழப்பிற்கு என்று அணியின் நிலை இருந்தபோது நான்காம் நாள் முடிவடைந்தது. 2 இலக்கு கைவசம். ஒரு நாள் முழுவதும் விளையாடி 111 ஓட்டம்எடுத்தால்வெற்றி என்ற நிலையில் ஐந்தாம்நாள் ஆட்டம் தொடங்கியது. சிறிநாத்தின் பந்துவீச்சில் தனராஜ் ஒருபிடி கொடுக்க பிரபாகர் அதை விட்டுவிட்டார். வோர்ஸ் 11 ஓட்டங்களுடன் இருந்தபோது சிறிநாத்தின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார். பின்பு வந்த கஃபி ஓட்டம் எதுவும் எடுக்காத நிலையில்இருந்தபோது ராஜூவின் பந்துவீச்சில் டெண்டுல்காரிடம் பிடிகொடுத்து தனராஜ் ஆட்டம் இழக்க மொத்தம் 266 ஓட்டங்களுக்கு தனது இரண்டாவது இனிங்சை மேற்கிந்தியா இழந்தது. 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வென்றது. பந்துவீச்சில் சிறிநாத் 4 இலக்கையும் ராஜூ மூன்று இலக்கையும் பிரபாகர் 2 இலக்கையும் சௌகான் ஒன்றையும் வீழ்த்தினர்.

இந்த டெஸ்ட் ஆட்டம் பரபரப்பாக முடிவடைந்தமைக்கு இரு அணிகளதும் குறைந்த ஓட்ட எண்ணிக்கைகளும் ஒரு காரணமாகும் முதலாவது இனிங்சில் இந்தியா பெற்ற குறைந்த எண்ணிக்கை இந்த டெஸ்ட் ஆட்டம் ஒரு முடிவைத் தரப் போகிறது என்பதைக் கட்டியம் கூறிநின்றது தொடர்ந்த மே. இந்தியாவும் 300க்கு மேல் செல்லாது என்பது, முடிவை இன்றும் நிச்சயப்படுத்தியது இந்தியா இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த பாணி (3/11) மேற்கிந்திய வெற்றிக்கு சாதகமாவது போல இருந்தது எனினும் மேற்கிந்திய அணியின் அனுபவமின்மை இந்தியாவை 350 க்கு மேல் ஓட்டம் எடுக்க வைத்தது. இந்நிலையில் தான் அணித் தலைவர் வோல்ஷ் தனது அணியின் மூத்த நிரந்தர உறுப்பினர்களான டெஸ்மன்ட ஹெயின்ஸ், அம்புரோஸ், இயன் பிஷப், நிரந்தர அணித்தலைவர் றிச்சி றிச்சாட்சன் ஆகியோர் தம் சொந்தக் காரணங்களால் அணியில் இடம்பெற முடியாமற் போனமை பற்றி மன வருத்தப்பட்டுள்ளார்.

இது ஒரு புறம் இருக்க இந்திய அணியில் தன் இடத்தை இழந்திருந்த சஞ்சய் மஞ்சரேக்கர் தன் இரு இனிங்சுகளிலும் தன்னை நிரூபித்து ஒரு அச்சாணியாக நின்று இந்திய தேர்வாளருக்கு முகத்தில் அடித்தது போலப் பதிலளித்துள்ளார். எது எவ்வாறாயினும் மேற்கிந்திய அணி தான் கண்ட தோல்வியை 'தன் அனுபவக் குறைவின் வெளிப்பாடு' என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். இதே வேளை அண்மைக்காலத்தில் தற்போதைய சர்வதேச அணித் தலைவர்களில் அனுபவமும் திறமையும் முதன்மை பெற்ற அசாருதீனும், அவர்தம் இளம் அணியும் சேர்ந்து மகத்தானதொரு டெஸ்ட் சகாப்தத்தின் ஆரம்பத்தில் நிற்கிறவர்கள் என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

# யாழ். மத்தியகல்லூரி......

டன் இடம்பெற்றது. 2-1, 3-1, 2-1, என்ற வகையில் மத்தியகல்லூரியின் மூன்று பிரிவு அணிகளும் முறையே வெற்றிகளை ஈட்டின. கண்ணன், கிளையன்ற், முகுந்தன், ஜோன்சன் ஆகியோர் கோல்களைப் போட்டனர்.

பதினொராவது ஆட்டம் யூனியன் கல்லூரி அணிகளுடன் ஆரம்பித்து பெரு மழை காரணமாக மைதானத்தில் நீர் தேங்கியமையால் தடைப்பட்டது.

இறுதி ஆட்டம் 31-10-94 அன்று பரி. யோவான் கல்லூரி அணிகளுடன் மிகவும் விறுவிறுப்புடனும் பரபரப்புடனும் ஆடப்பட்டது. அதிகமான பார்வையாளர்கள் அன்று ஆட்டத்தைக் காணத் திரண்டிருந்தனர். முதலில் இடம் பெற்ற மூன்றாவது அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் 2-0 என்ற வகையில் மத்திய கல்லூரி வெற்றி பெற்றது. ஜோன்சன், டிலான் ஆகியோர் கோல்களைப் போட்டனர். இரண்டாவது அணிகளுக்கிடையயான ஆட்டத்தில் இடைவேளைக்கு முன்னர் மத்திய கல்லூரி வீரர் முகுந்தன் ஒரு கோலைப் போட்டார். இடைவேளைக்குப் பின்னர் பரி.யோவான் கல்லூரி ஒரு பனால்டி உதை மூலம் ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி மாற்றியது. முதலாவது அணிகளுக்கிடையயான மிக விறுவிறுப்பாக ஆடப்பட்டது இரு அணிகளும் பலமாக மோதின. இடைவேளைக்கு முன் ஒரு பனால்டி உதை மூலம் டன்சன் மத்திய கல்லூரிக்கு ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார். ஆனால் ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் பரி.யோவான் அணியினர் ஒரு கோலைப்போட்டு நிலைமையைச் சமப்படுத்தினர். ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

## ஆட்ட முடிவுகளின் தொகுப்பு

இந்த உதைபந்தாட்ட நூற்றாண்டு விழா தொடர்பாக இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகளை தொகுத்து நோக்கின் மத்திய கல்லூரியின் முதலாவது அணியானது தனது முதல் ஆட்டமான சம்பத்திரிசியார் கல்லூரி அணியுடனான ஆட்டத்தில் மாத்திரம் ஒரு கோலால் தோல்வியைச் சந்தித்தது. மற்றைய கல்லூரி அணிகளில் ஐந்து அணிகளுடன் மோதி வெற்றியினை ஈட்டியது ஏனையவற்றுடன் ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

இரண்டாவது அணியை எடுத்து நோக்கும் போது அது இரண்டு கல்லூரிகளின் அணிகளுடன் மாத்திரம் தோல்வியைத் தழுவியது பரி. யோவான் அணியுடன் வெற்றி தோல்வியின்றி முடிய ஏனைய அனைத்து ஆட்டங்களிலும் வெற்றியை ஈட்டியது. மூன்றாவது அணியை எடுத்து நோக்கினால் அது ஒரேயொரு கல்லூரி அணியுடன் மாத்திரம் தோல்வி கண்டது இரண்டு அணிகளுடன் வெற்றிதோல்வியற்ற நிலையைச் சந்தித்தது. ஏனைய அணிகளுடன் சம்பத்திரிசியார், பரி.யோவான் உட்பட சிறப்பாக ஆடி வெற்றியைச் சம்பாதித்தது. சுருக்கமாகக் கூறின் இந்த உதைபந்தாட்டத் தொடரின் முடிவுகள் மத்திய கல்லூரி அணிகளின் வளர்ச்சிப் போக்கினைக் காட்டி நிற்கின்றன.

## வெற்றிக்கு வித்திட்டோர்

மத்திய கல்லூரி அதிபர் நா. க. சண்முகநாதபிள்ளை அவர்களின் சிறந்த வழி காட்டுதலும், விளையாட்டுத்துறை முதல்வர் ரி. மனோகரன், உதைபந்தாட்டப் பொறுப்பாசிரியர் ஆ. சௌந்தரலிங்கம் மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் அயரா உழைப்பும் இந்த உதைபந்தாட்ட நூற்றாண்டு விழாவின் வெற்றிக்குப் பெரிதும் உதவின. இவ் விழாவுக்காக அணி வீரர்களைச் சிறப்பான முறையில் பயிற்றுவித்த ஜே. மோகன், எஸ். எல். றொய் (சீனியர்) வி. விக்கிரமசிங்க ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். அணித்தலைவர்களான பகீரதன், கிளைமன்ற், அகிலநாயகம் ஆகியோர் தம் பணிகளைச் செவ்வனே செய்து நிகழ்வின் வெற்றிக்கு உழைத்தனர். இப்போட்டித் தொடரில் பங்கு பற்றியதன் மூலம் விழாவின் வெற்றிக்கு உதவிய சகல கல்லூரி அணிகளும், மத்தியஸ்தம் வகித்த யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கமும், நிதியுதவி புரிந்த வர்த்தக அன்பர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

## ஒரு சகாப்தத்தின்

நெறி நீண்ட காலமாக நிறுத்தப்பட்டிருப்பதும் ஒரு சவாலாக அமைகின்றது. பல்வேறு பயிற்சி நெறிகள் இங்குள்ள இரு பயிற்சிக் கலாசாலைகளில் இருந்தபோதும் உடற்கல்விக்கான விசேட பயிற்சி நெறி நிறுத்தப்பட்டிருப்பது வேதனைக்கும், பின்னடைவுக்கும் உரியது இது குறித்து கல்வி சார்ந்த சமூகம் எதையுமே செய்யவில்லை

மைதானத்திலே விட்டுக் கொடுத்தல், வெற்றி தோல்வியைச் சமமாக ஏற்றல், விளையாட்டை விளையாட்டாக மதித்தல் என்பவற்றை கற்றுக் கொள்வதற்கு அதற்காக விசேடமாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களே வழிகாட்டிகளாக அமைய வேண்டும். இந்நிலையில் இன்று விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிலேயே இதற்கென விசேடமாகப் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அதிலும் சிலர் வசதி வாய்ப்புகள் குறைந்த பாடசாலைகளோடு இருப்பது ''மூடி வைக்கப்பட்ட நட்சத்திரங்கள்போல்'' ஆகிவிடும் என்பது மெய்.

இன்று உலகளாவிய ரீதியில் மக்களின் செயற்பாடுகளில் பெரிதும் பின்னிப் பிணைந்த ஒன்றாக விளையாட்டுத் துறை மிளிர்ந்து கொண்டு வருகின்றது. ஆனால் எமது பிரதேசத்தில் இதன் வளர்ச்சி துரிதமாக இல்லை. ஸ்ரீ லங்காவின் தலைநகர் சென்று அங்கு நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகளை கண்ணுற்று பின் இங்கு வந்து நடைமுறைப்படுத்துவதைவிட இத்துறை சார்ந்த கல்விமான்கள் ஸ்ரீலங்கா அரசிடம் இங்கு உடற்கல்விக்கான விசேட பயிற்சிநெறி ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் பெற்று அதன்மூலம் முழுமை பெற்ற பயிற்றப்பட்ட பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களை திசைப்படுத்தி எமது பிரதேசத்தின் சகல பாகங்களிலும் விளையாட்டுத்துறையை சர்வதேச மட்டங்களுக்கு உயர்த்த முடியுமென்பது உண்மை.

''விளையாட்டென்பது ஆதிக்கங்கள் எதுவுமின்றிக் காட்டப்படும் சுயாதீனமான நடத்தை'' என்பது ஜான் லின்காஸ் என்பவரது கூற்று. அன்னாரின் கூற்றுக்கமைய விளையாட்டுத்துறை மேன்மேலும் ஆதிக்கமற்ற செயற்திறன் உள்ளதாகவளரவேண்டும். இதுவே எல்லோரது அவாவும்.

## ஆசிய வெற்றிக்

சாம்பியனான ஜேர்மனிய வீரர்களைதிக்குமுக்காடவைத்தமையை ரசிகர்கள் இலகுவில் மறந்துவிட மாட்டார்கள். மூன்றாம்நான்காம் இடங்களிற்கான போட்டியில் குவைத்கொரியாவை 2-1 என்றவாறு வெற்றிவீட்டியது.

ஆண்கள் உதைபந்தாட்டத்தில் தாம் தவற விட்ட தங்கப் பதக்கத்தைப் பெண்கள் உதைபந்தாட்டத்தில் சீனா தட்டிச் சென்றது. மீண்டும் பெண்கள் ஆட்டத்திலும் யப்பான் முதலிடம் பெற முடியாது. வெள்ளிப்பதக்கத்துடன் திருப்தி கொள்ள வேண்டியதாயிற்று. 3-ம் இடத்தைத் தாய்வானும், நான்காம் இடத்தையே கொரியாவும் பெற்றுக் கொண்டன.

இறுதியாகக் குறிப்பிடுகையில் ஆண்கள் உதைபந்தாட்டத்தைப் பொறுத்தவரை உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி தகுதிநிலைப் போட்டிகளில் உஸ்பெக்கிஸ்தானை வீழ்த்த கொரியா, யப்பான், சீனா, சவூதி போன்ற நாடுகள் இப்பொழுதே கங்கணம் கட்டியிருப்பார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

கண்டிக்குளி மகளிர் கல்லூரி
(VOCATIONAL TRAINING INSTITUTE)
வருடாந்த மனைப் பொருளியல்
கண்காட்சி
காலம்:- நவம்பர் 30, டிசம்பர் 1, 2
நேரம்:- காலை 9 மணி - மாலை 5 மணி
அதிபர்
(சி/10763)

சிந்தனைக்கு

உழைத்து விதைத்து உகுத்த கண்ணீரை
பாத்தியில் பாய்ச்சி பயிர் செய்யப் பாடுபடாமல்
தழைத்துக் குலுங்கும் தங்க நிற தானியத்தை
அறுவடை செய்ய ஆசை கொள்ளலாமோ?
- பொஷன் கேத்தே.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-11-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# சந்திரிகா அரசு தடம் மாறுகின்றது

இனப்பிரச்சினை விவகாரத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கம், தேர்தல் காலத்தில் கூறிக் கொண்டது போன்று செயற்படுவதாகவோ அன்றி அணுகுவதாகவோ தெரியவில்லை. அரசாங்கத்தின் போக்கு திசை மாறிச் செல்கிறது போல் உள்ளது. இது குறித்த கேள்விகள், சந்தேகங்கள் இன்று அரசியல் வட்டாரங்களில் நிறையவே உண்டு.

இவ்வாறானதொரு கருத்தையே அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் மாவீரர் தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் 'ஒருபுறம் தமிழருக்கு உரிமைகள் வழங்குகின்றோம் என்று சொல்லிக் கொண்டு மறுபுறம் இராணுவத்தைப் பலப்படுத்தி எம்மை இராணுவ ரீதியாக அச்சுறுத்தி ஒரு தீர்விற்கு கொண்டு வரலாம் எனச் சிங்கள அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது என நினைக்கின்றேன்' எனக் குறிப்பிட்டார்.

திரு. தமிழ்ச்செல்வன் எழுப்பியுள்ள இச்சந்தேகத்தை இன்று சந்திரிகா அரசு எடுத்துவரும் நடவடிக்கை மூலம் உறுதிப்படுத்தி வருகின்றது என்றே கூறலாம். அதிலும் குறிப்பாக சந்திரிகா அரசு ஆட்சிக் கட்டில் ஏறிய போது இருந்த நிலையில் இருந்து தற்பொழுது பெரிதும் மாறுபட்டதும், முரண்பாடானதுமான போக்கை கடைப்பிடிப்பதாகவே தெரிகின்றது.

இவ்விடயத்தில் சந்திரிகா குமாரதுங்காவின் ஆட்சிக் காலம் குறுகியதாக இருப்பினும் கூட ஒருபட்டியல் இடக்கூடிய அளவில் விடயங்கள் உள்ளன. இதில் சந்திரிகா இராணுவத்துடன் தற்பொழுது கடைப்பிடிக்கும் போக்கு முக்கியமானதாகும். ஆரம்பத்தில் அவர் இராணுவத்தைக் குறித்து விமர்சித்ததைப் போன்று தற்பொழுது விமர்சிப்பதை நிறுத்திக் கொண்டுள்ளார். அத்தோடு இராணுவத்தினருடனான உறவை வளர்ப்பதிலேயே அவர் கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது.

இதன் ஓர் அம்சமாகவே இராணுவத் தளபாட ஒதுக்கீட்டிற்கும், இராணுவத் தேவைக்குமென பெருமளவு நிதியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதெனலாம். அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது சமாதானத்தின் மீதான நம்பிக்கை என்பதை விட இராணுவத்தீர்வின் மீதான நம்பிக்கையே மிகுந்துள்ளதைக் காட்டுகின்றதெனலாம். இது அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கூறியது போன்று 'அச்சுறுத்தித் தீர்விற்குக் கொண்டு வர மேற்கொள்ளப்படும் முயற்சி' எனலாம்.

இதேசமயம் இனப்பிரச்சினை விவகாரத்தில் குறிப்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து சிறிலங்கா அரசு இந்தியாவின் ஆலோசனையைப்பெற்றுக் கொள்ளலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாகவே சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியா செல்லவுள்ளதாக கொழும்புத் தகவல் ஒன்று ஊர்ஜிதப்படுத்துகின்றது.

இந்தவகையில் சந்திரிகா அரசாங்கம் இனப்பிரச்சினை குறித்த விடயத்தில் சமாதான தீர்வு என்பதில் இருந்து மெதுமெதுவாக ஆனால் நீண்டதூரத்திற்கு விலகிச் செல்வதாகவே கூற முடியும். ஏனெனில் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்திய ஆலோசனையைப் பெறுவதென்பது இனப்பிரச்சினைக்கான 'சமாதானத் தீர்வை' சிக்கலாக்குமே ஒழிய தீர்க்க உதவமாட்டாது.

இந்திய அரசாங்கமானது ஏற்கனவே விடுதலைப் புலிகளுடன் முரண்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளுடன் சுமார் இரண்டரை வருடம் போர் ஒன்றை நடத்தி தோற்றுப் போன இந்திய அரசு அதன் காழ்ப்புணர்வில் இருந்து இன்னமும் விடுபட்டதாக இல்லை. இதன் காரணமாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான போக்கை இந்தியா தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றது. இந்நிலையில் இந்தியாவின் ஆலோசனையானது புலிகளுடனான சமாதானத்திற்கு விரோதமாகவே இருக்கும் என்பதை எவரும் கூறித்தான் தெரியவேண்டும் என்பதல்ல.

மறுவளமாகப் பார்த்தால் கூட இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா ஆலோசனை கூறுவதற்கு அதனிடம் என்ன உள்ளது? இந்தியாவிலுள்ள 25 மாநிலங்களில் பலவற்றில் ஏதோ ஒரு மக்கள் கூட்டம் - சில மாநிலங்களில் பல- தமது சுயநிர்ணய உரிமையைக் கோரிய வண்ணமே உள்ளன. அதற்காகப் பல ஆயுதப் போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன. இவற்றைத் தீர்த்துவைக்க முடியாது இந்திய அரசு திணறிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் எவ்வாறு இலங்கை இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஆலோசனை கூறிவிட முடியும்?

இந்தவகையில் பார்க்கும் போது சந்திரிகா அரசு இனப்பிரச்சினை விவகாரத்தில் மக்கள் அளித்த தீர்ப்பிற்கு விரோதமான வழியில் செல்கின்றது என்றே கூறலாம். அரசாங்கத்தின் இப்போக்கானது கடந்தகாலச் சிங்கள ஆட்சியாளர்கள் விட்ட தவறை மீண்டும் ஒரு முறை விடுவதாகவே இருக்கும்.

## கல்வி அமைச்சர் பெயரால் புதுவித மோசடி நடக்கிறது

பொலிசார் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரானவின் பெயரில் ஒப்பமிடப்பட்ட கடிதங்களைக் காட்டி பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்கும் மோசடி ஒன்று பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாத்தளையைச் சேர்ந்தவர் என நம்பப்படும் ஒருவர் இம் மோசடியைச் செய்துள்ளார். இவ்விடம் கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரானவின் பெயரில்ஒப்பமிடப்பட்ட பல கடிதங்களும் காணப்பட்டுள்ளன. இம் மோசடிப் பேர்வழியின் நிரந்தர இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிசார் தீவிரமாகி இருக்கின்றனர்.

## உலங்கு வானூர்தி நோட்டம்

சிறிலங்கா வான்படையினரின் உலங்கு வானூர்தி ஒன்று நேற்று முன்தினம் இரவு 9.20 மணியளவில் மூளாய், பொன்னாலை கடலோர, கரையோரப் பகுதிகளை சுற்றி வட்டமிட்டும், நோட்டமிட்டும் சென்றது.

பலாலிப் பக்கமாயிருந்து காரைநகர் நோக்கிச் சென்ற இந்த உலங்கு வானூர்தி சற்று நேரத்தில் மேற்படி பகுதிகளை சுற்றி வட்டமிட்டது. அவ்வேளை மேற்படி பகுதிகளின் வான்பரப்பில் வெளிச்சக் குண்டுகளும் வீசப்பட்டன. இவை அதிபிரகாசத்துடன் சுமார் அரைமணி நேரம் மாறிமாறி எரிந்த வண்ணம் காணப்பட்டன. அத்தோடு காரைநகர், தீவகப் பகுதி இராணுவ நிலைகளிலிருந்து சேர்ச்லைட்டும் (தேடல் ஒளி) பாய்ச்சப்பட்டது. அராலித்துறைப் பகுதியில் இருந்து கலிபர் வேட்டுச் சத்தங்களும் இடையிடையே கேட்டவண்ணம் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

## லலித்தின் ஊழல்கள் பற்றி தனி விசாரணை இல்லை

-நீதி அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலி வர்த்தக கப்பல் துறை அமைச்சராக பதவி வகித்த காலத்தில் இவர் புரிந்ததாகக் கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தனியான விசாரணை நடத்தப்படமாட்டாது. இவ்வாறு பிரதி நிதி அமைச்சரும், நீதி அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கூறியுள்ளார்.

இந்த ஊழல் குற்றச்சாட்டுகள்தொடர்பாக பாராளுமன்றத்தின் முந்திய அமர்வின் போது தற்போதைய கைத்தொழில் அமைச்சர் பாரதூரமான குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தது தெரிந்ததே. இது தொடர்பாக ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினரான நந்தா மத்தியூ பாராளுமன்றத்தில் கேள்வியொன்றை எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளித்த அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேலும் கூறுகையில், ஊழல் மோசடிகள் தொடர்பாக விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதால் மேற்படி விடயம் தொடர்பாக தனியாக மற்றொரு ஆணைக்குழுவை நியமிக்க வேண்டியது அவசியமில்லை எனவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

## பயிர்செய்கைக்கு கடன் வழங்க அனுமதி

யாழ் மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கி கிளைகளில் 'ஒருங்கிணைக்கப்பட்ட' கிராமிய பயிர்ச்செய்கை திட்டத்திற்கு கடன் வழங்க அனுமதி கிடைத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் பயிர்செய்கையில் கிராமமட்டங்களில் உள்ள விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கோடு பயிர்ச் செய்கைக்கான கடன்களை வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

இதை செயற்படுத்த அனுமதி வழங்கியுள்ள சிறிலங்கா அரசு இதற்கு சில நிபந்தனைகளையும் விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

12 கட்சிகளின் கூட்டணியால்

## திறந்த பொருளாதாரம் சிதையும் ஆபத்து உள்ளது

- திரோன் பெர்னாண்டோ

(கொழும்பு)

பதினொரு கட்சிகளின் கூட்டணியாகவே தற்போதைய அரசு விளங்குகிறது. இது இப்போது தொண்டமானையும் இணைத்துக்கொண்டதன் மூலம் பன்னிரண்டாக உயர்ந்துள்ளது. இவ்வாறு ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான திரோன் பெர்னாண்டோ தெரிவித்தார். பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், திறந்த பொருளாதாரக்கொள்கையை இந்த அரசு சிதைக்கப் போகிறது. சுதந்திரக்கட்சி தனியாக ஆட்சி செய்தால் இக் கொள்கையை சிலசமயம் அமுல்படுத்தக்கூடும். எனினும் லங்கா சமசமாஜக் கட்சி போன்றவற்றுடன் கூட்டணி அமைக்கப் பட்டிருப்பதால் இது சாத்தியம்தானோ என்பதில் சந்தேகம் ஏற்படுகிறது எனவும் தெரிவித்தார்.

## சோதனைச் சாவடியை கடந்த பின் வாகனச்சாரதி மீது சூடு

கல்முனையில் சம்பவம்

(கல்முனை)

கல்முனைவைத்தியசாலைச் சந்தியில் பொலிஸ் சோதனை நிலையமருகே உழவு இயந்திரச் சாரதியான வாலிபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார். கடந்த 21ம் திகதியன்று இடம் பெற்ற இச் சம்பவம் தொடர்பாக மனித உரிமைப் பணிக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, வீதியால் வந்து கொண்டிருந்த உழவு இயந்திரம் கல்முனை வைத்தியசாலைச் சந்தியில்வைத்து வழமையான சோதனைகளுக்கு இலக்கானது. அதன் பின்னர் அவ் வாகனம் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டது. சோதனை நிலையத்தைக் கடந்து அப்பால் சென்றதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இதனால் இவ் வாகனத்தின் சாரதி பலத்த காயங்களுக்கு இலக்காகியுள்ளார். நாகமணி தெய்வேந்திரன் என்னும் இவ் வாலிபர் கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இச் சம்பவம் குறித்து மனித உரிமை பணிக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதுடன் சம்பவம் குறித்து முழுவிபரமும் அறிந்து கொள்வதற்காக கொழும்பிலிருந்து சட்டத்தரணி ஒருவரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

## ராஜாக்களின் உதவியுடன் ஆட்சி தொடர்கிறது

-சபையில் ஐ.தே.க எம்.பி

(கொழும்பு)

ஐப்பார்ட் போட்டால் பதவியிலிருந்து விலகிக் கொள்வேன் இவ்வாறு ரூபவாகினிக் கூட்டுத்தாபன தலைவர் வசந்தராஜா கூறியுள்ளார் இத் தகவலை பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான திரோன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் வசந்தராஜா, மகாராஜா, மல்லிகா ராஜா ஆகியோருடன் தான் இந்த ஆட்சி நடக்கிறது கடந்த மூன்று மாத காலத்தில் மொத்த விற்பனை வெகுவாக குறைந்து விட்டது எனவும் குறிப்பிட்டார்.

ரூபவாகினிக் கூட்டுத்தாபனத் தலைவராக வசந்தராஜாவும், ஜனாதிபதி திருமதி சந்திரிகாவின் சமூக தொடர்பு செயலாளராக திருமதி மகாராஜாவும் கடமையாற்றி வருவது தெரிந்ததே.

## பொ.ஐ.முவில் இணையும்படி தாயார்என்னைக்கேட்டார்

-அநுரா தகவல்

பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்து செயற்படுமாறு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தம்மை அழைத்ததாகவும், அதற்கு தான் மறுப்பு தெரிவித்து விட்டதாகவும் ஐ.தே.கவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரும்,முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அநுரா பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் திருமதி சிறிமாவோ பிரதமரானமைக்கு வாழ்த்து தெரிவிக்கும் முகமாகசென்று சந்தித்த போதே தமக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார் இச் சந்திப்பின் போது கட்சி விடயங்கள் மற்றும் அரசியல் நிலை என்பன தொடர்பாக பேசப்பட்டதாகவும் கூறப்படுகிறது

## பயிற்சி வகுப்புக்கள்

(கொழும்புத்துறை)

யாழ். ஊனமுற்றோர் புனர் வாழ்வுச் சங்கம் ஊனமுற்றவர்களுக்கு மட்டும் இலவசமாக சங்கத்தின் சார்பில் கதிரை பின்னல், தையல் பயிற்சிகளை நடாத்தவுள்ளனர்.

இப்பயிற்சியை இலவசமாகப் பெற விரும்பும் ஊனமுற்றவர்கள் இல. 16, கொழும்புத்துறை வீதியில் உள்ள (சுண்டுக்குளி சந்திக்கு அருகாமையில்) சங்கப்பணிமனையில் நேரிலோ, அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்ளுமாறு சங்கப் பொருளாளர் திருமதி. ஜே. எம். சிவப்பிரகாசம் அறிவித்துள்ளார். (24)

## இரணவில வானொலி நிலையம்; விரைவில்இணக்கம் ஏற்படும்

மத அமைப்புகள் நம்பிக்கை

(கொழும்பு)

இரணவிலவில் அமெரிக்க வானொலி நிலையம் அமைப்பதற்கான பிரச்சினையில் இணக்கப்பாடு ஒன்று எட்டப்படலாம்என்ற நம்பிக்கையை சில மத அமைப்புக்கள் வெளியிட்டுள்ளன.

இரணவிலவில் அமெரிக்க வானொலியின் அஞ்சல் நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பாக சர்ச்சைகளும், ஆர்ப்பாட்டங்களும் கடந்த சில காலமாக இடம் பெற்று வருவது தெரிந்ததே.

## சுதந்திரக்கட்சியை இதுவரை கட்டிக்காத்தது நானே

-- சிறிமாவோ

(கொழும்பு)

நான் பிரதமரானதற்கு பலவித கருத்துகள் நிலவினாலும் மைத்திரிபால,கலுகல்ல, அநுரா, சந்திரிகா போன்றோர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு சென்ற சமயம் கட்சியை கட்டிக்காத்தது நானே என பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

தாம் அவ்வாறு நடந்திரா விட்டால் பிரேமதாசாவின் நெருங்கியவர்கள் இன்று கட்சியின் உயர்பதவியில் இருந்திருப்பர் என்றும் அவர் குறிப்பிட்டார். அநுரா மீண்டும் எம் கட்சிக்குள் வந்தால் பிரச்சினை ஏதும் எழ வாய்ப்பில்லை. சிறந்த பேச்சாளரான அநுரா கட்சியின்நலனுக்காக அரும்பணியாற்றியவர் எனவே அவரை மீண்டும் கட்சியில் சேர்ப்பதற்கு எடுக்கும் நடவடிக்கையை சிலர் எதிர்ப்பதால் பெரும் பிரச்சினையாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

பிரதி அமைச்சர் மூலம் வரவுசெலவுத்திட்டம்

## சபையில் சமர்ப்பிப்பதற்கு அரசியலமைப்பே காரணம்

- நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

ஐ. தே. க அரசு தயாரித்த அரசியலமைப்பின் காரணமாகவே பிரதி நிதி அமைச்சர் மூலம் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டது. இந்த அரசியலமைப்பை நாம் மாற்றி அமைப்போம். இவ்வாறு விடமைப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி.சில்வா வியாழன்று பாராளுமன்றத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், உலக நாடுகள் எமது அரசில் நம்பிக்கை வைத்துள்ளது. அம்பாறை நீர் விநியோகத் திட்டத்திற்கு ஜேர்மன் அரசு குறைந்த வட்டியில் நிதியுதவி புரிய முன்வந்துள்ளது. கொழும்பு நகரத்தின் வடிகால் அமைப்புத் திட்டத்தைப் புனரமைக்க உலக வங்கி உதவவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகளை புதனன்று சந்தித்தேன். உள்நாட்டுத் திட்டத்திற்கு 70 கோடி அமெரிக்க டாலர்களைத் தர இந்தப் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். நாம் வெளிநாட்டு உதவிகளை ஏற்கும் போது அவர்கள் விதிக்கும் அத்தனை நிபந்தனைகளுக்கும் ஒப்புக் கொள்வதில்லை. எமது நிலைப்பாட்டை தெரிவித்தே எமக்கென்ற நிதி உதவியை பெறுகின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

## வைத்தியர்கள் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகள், மற்றும் முதன்மை வைத்திய அதிகாரிகள் என 1400 பேர் நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக திவயின நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்படுகையில் வைத்திய அதிகாரிகளின் இவ் வேலை நிறுத்தத்தால் சுகாதார சேவைகள் பாதிப்படையும் நிலை தோன்றியிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

## திருமதி பிரேமச்சந்திராவிற்கு பாராளு. உறுப்பினர் பதவி

ஐ. ஐ. தே. மு. தீர்மானம்

(கொழும்பு)

பாலத்துறை குண்டுவெடிப்பு சம்பவத்தில் பலியான முன்னாள் அமைச்சர் ஜி.எம் பிரேமச்சந்திராவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அவரது மனைவியே நியமிக்கப்பட வேண்டும் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தேசிய செயற்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இம் முன்னணியின் தேசிய செயற்குழு அண்மையில் கூடிய போது இத் தீர்மானத்தை மேற்கொண்டதுடன் இது தொடர்பாக ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும், செயலாளர் காமினி அத்துக்கோரள போன்றோருடன் தொடர்பு கொண்டுள்ளது.

## இ. தொ.கா. தொடர்ந்தும் தனித்துவமாக செயற்படும்

- தொண்டமான்

(கொழும்பு)

நாங்கள் தொடர்ந்தும் தனித்து இயங்குவோம். சுதந்திரமாகச் செயற்படுவோம். இவ்வாறு அமைச்சர் தொண்டமான் இ. தொ. கா. வின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் அட்டன் நகரில் இடம் பெற்ற போது கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், கடந்த 17 வருடங்களாக ஐ. தே. க வுடன் சேர்ந்துசெயற்பட்டுள்ளோம். கடந்த 30 வருடங்களாக ஐ. தே. க வுடன் உறவு வைத்திருந்துள்ளோம். நாம் கேட்ட எல்லா உரிமைகளையும் அவர்களால் கொடுக்க முடியவில்லை. நாம் எப்போதும் தனித்துவமாகவே செயற்பட்டு வந்துள்ளோம். நாம் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்து இருக்கவில்லை. எமது உரிமைகளை வழங்க முன்வரும் எந்த கட்சியையும் நாம் ஆதரிப்போம் எனவும் குறிப்பிட்டார்.

## செஞ்சிலுவை வாகனங்கள் இராணுவத்தால் தடுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள் சிறிலங்கா இராணுவத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி முல்லைத்தீவு கிளைகளிற்கு பொருட்களை கொழும்பில் இருந்து ஏற்றி வந்த வாகனங்கள் வவுனியா தாண்டிக்குள இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994 - 11 - 29
செவ்வாய் இரவு

08. 01 - மாவீரர் நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு
08. 20 - நலந்தானா - மாரி காலத்தில் அதிகமாகப் பரவும் மலேரியா நோயும் அதனை தடுப்பதற்கான ஆலோசனைகளும் வழங்குபவர் வைத்தியகலாநிதி சுப்பிரமணியம்
08. 30 - செய்திகள்
08. 40 - கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுதிய "முட்டுக் கட்டைகள்"
08. 50 - களமும் கானமும் - மலரன்னை எழுதிய "வாழ்ந்தும் நெஞ்சங்கள்"
09. 00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

1994. 11. 30
புதன் காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - நீங்கள் கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச்செய்திகள்
07. 40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08. 00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# கிளிநொச்சியில் மாவீரர் நாள் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக் கோட்டத்தின் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் நினைவாக பிரதான ஈகச்சுடரை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றிவைத்தார்.

மாவீரர் நாளின் அதிகாலை நிகழ்ந்த மாவீரர் சுடர் ஏற்றும் இந் நிகழ்வில் இங்கிருந்த 720 மாவீரர்களின் கல்லறைகள் முன்பாகவும், அம் மாவீரர்களின் பெற்றோர் ஈகச்சுடரை ஏற்றிவைத்தனர்.

அதைத் தொடர்ந்து மாவீரர் நாள் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. நேற்று முன்தினம் மாலை ஐந்துமணியளவில் தேசியக் கொடி இறக்கப்பட்டதுடன் மாவீரர் வார நிகழ்வுகள் இங்கு முடிவுக்கு வந்தன.

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும், கிளிநொச்சி கனகபுரம் ம. வியிலும் இந் நிகழ்வுகள் இடம்பெற்றன. பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இவற்றில் கலந்துகொண்டனர்.

இரவு பத்துமணியளவில் இப் பாடசாலைகளில் இருந்து கனகபுரம் சசிகலா விளையாட்டரங்கிற்கு அழைத்து வரப்பட்ட பெற்றோர், அங்கிருந்து பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்வலமாக மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அழைத்து வரப்பட்டனர். இதைத் தொடர்ந்து மாவீரர் ஈகச்சுடரேற்றும் நிகழ்வு இடம்பெற்றது.

நேற்று முன்தினம் மாலையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் அஞ்சலிப் பொதுக்கூட்டமும் இடம்பெற்றது. கிளிநொச்சிக் கோட்ட சிறப்பு பொறுப்பாளர் இலக்கியன் ஈகச்சுடரை ஏற்றி வைக்க ஆரம்பமான பொதுக்கூட்டத்தில் தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த தஇங்கரன், வன்னிமாவட்ட கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் செழியன், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் பாணன், தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் உரையாற்றினர் மாவீரர்களை நினைவுகூரும் சிறப்புக் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

15 வயதுப் பிரிவினர்

## பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று 15 வயதுப் பிரிவிற்கான இறுதிப் போட்டி பிற்பகல் 1.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெறும்.

இப் போட்டியில் 3.ம் இடத்திற்காக சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்தை எதிர்த்து ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் இறுதிப் போட்டியில் உரும்பராய் இந்துக்கல்லூரியை எதிர்த்து நாவாந்துறை றோ. கவும் மோதும்.

இந் நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராக முன்னை நாள் யாழ். மத்தியகல்லூரி அதிபர் திரு. வி. பாலசுந்தரமும், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. ந. இளம்பரிதியும் கலந்து கொள்வார்கள்.

இப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வழங்கும் லெப். கேணல் இம்ரான் நினைவுச் சுற்றுக் கிண்ணம் வழங்கப்படும்.

### உதைபந்தாட்டம்

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவு அரை இறுதிப் போட்டி இன்று காலை 8-30 மணிக்கு யாழ் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும். இப்போட்டியில் ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து புனித ஹென்றியரசர் மோதும்.

### தாச்சிப் போட்டி

சங்கானைக் கல்விக் கோட்டத்தினரால் கோட்ட மட்டத்தில் சம்பியன்களைத் தெரிவுசெய்வதற்கான தாச்சிப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் சுழிபுரம் விக்ரோரியாக்கல்லூரி மைதானத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளன.

யாழ். கல்வித் திணைக்கள வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

## 1-ம் ஆண்டு நிறைவு நாள் நினைவஞ்சலி



அமரர்

**இரத்தினவதி வேலுப்பிள்ளை**

அவர்கள்

சிரார்த்த நாள்:
29 - 11 - 1994 செவ்வாய்க்கிழமை

சிரார்த்த திதி:
கார்த்திகை அபரபக்க ஏகாதசி

ஆறாத் துயர்க் கடலில்
அனைவரையும் மூழ்கவிட்டு
மாறான விதிவசத்தால்
மறைந்தவுமை மறவமம்மா!

இல்லத்து ஒளி விளக்காய்
இருந்தவெங்கள் பொற் கொடியே
வல்லசுர எறிகணைக்காய்
மறைந்த துயர் மறப்பதுமோ!

29 - 11 - 94 இன்று அன்னாரின் சிரார்த்த வைபவத்திற் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், அன்பர்களை அன்பாக அழைக்கின்றோம்.

இங்ஙனம்;
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

''வேலகம்''
குருக்கட்டு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
29-11-1994

(10223)

### சமாதான

கான நடவடிக்கைகளை நீங்கள் முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் பேணப்பட்ட நிலையில் தான் விரைவில் தாம் வாழும் பிரதேசங்களில் சமாதானம் எட்டப்படல்வேண்டும் என்று கனடாவில் உள்ள தமிழர்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

கனடா தற்பொழுது பெருமளவு தமிழரைக் கொண்டிருக்கின்றது. ரொறாண்டோ நகரின் சகல பிரதேசங்களும் உட்பட எமது மாகாணமான ஒன்றாறியோவில் ஏராளமான தமிழர்கள் செறிந்து வாழ்கின்றார்கள், இத் தமிழ் மக்களை நான் அடிக்கடி சந்திப்பேன். இவர்களிடம் அவர்கள் அமைதி குறித்து கொண்டுள்ள அக்கறையை நான் நன்கு அறிவேன். இந் நிலையில் சிறிலங்காவில் அமைதியையும் சமாதானத்தையும் தங்கள் அரசாங்கம் விரைவில் ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை சிறிலங்காவில் சிவில் யுத்தம் நடைபெறும் பிரதேசங்களில் துன்பப்படும் மக்களுக்கு உதவுவதற்காக சில அவசர ஏற்பாடுகளை இந்த அமைப்பு மேற் கொண்டு வருகிறதென்று இதன் செயலாளர் திரு. சந்திரபாலா தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக அவஸ்தைக்குள்ளாகியிருக்கும் மக்களுக்கு உதவும் முகமாக மருந்து வகைகள், போசாக்கு மருந்துவகைகள், பால்மா போன்றவற்றை 1995 பெப்ரவரியில் சிறிலங்காவுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த அமைப்பு சமாதான

# இந்திய தேர்தல் ஆணையாளர் ஏழு மணி நேரம் தடுத்து வைப்பு

## அ. தி. மு. க., ம. தி. மு. க. போராட்டத்தின் விளைவு

(சென்னை)

இந்திய தேர்தல் ஆணையாளர் நேற்று முன்தினம் சென்னை வந்தபோது அவர் விமான நிலையத்தை விட்டு வெளியேற முடியாத நிலையில் ஏழுமணிநேரம் விமான நிலையத்திலேயே தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

சேஷன் உறவினர் ஒருவரின் திருமணத்திற்காக சென்னை வந்திருந்தார். விமான நிலையத்திலிருந்து அவர் ஹோட்டல் செல்லும் பிரதான வீதியில் ஆளும் அ. தி. மு. க. மற்றும் வை. கோபாலசாமியின்ம.தி.மு.க. ஆதரவாளர்கள் திரண்டு கறுப்புக்கொடி காட்ட நின்றிருந்தனர்.

சேஷன் தாம் அவ் விதிவழியாகவே செல்வேன் என அடம்பிடித்த வேளையில் பொலிசார் மாற்றுவழியாக அவரை அழைத்து செல்ல எடுத்த நடவடிக்கைகளை சேஷன் நிராகரித்தார். வீதி மறியலால் விமான நிலையமும் ஸ்தம்பிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ் வேளையில் சேஷன் விமான நிலையத்தில் இருந்து மாநில தலைமை செயலர் ஹரிபாஸ்கரை தொலைபேசியில் அழைத்து தம்மை உடனடியாக வந்து சந்திக்காவிட்டால் ஜனாதிபதியிடம் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாக கூறப்போவதாகவும் மிரட்டினார்.

வீதியில் திரண்டிருந்தவர்கள் கலைந்து செல்ல ஏழு மணி நேரம் எடுத்தது. விமான நிலையத்தில் ஏழு மணிநேரமாக முடங்கியிருந்த தேர்தல் ஆணையாளர் சேஷன் மாநில அரசு இதன் விளைவை சந்திக்கும் என்று கூறினாராம்.

இவ் வீதி மறியல் போராட்டத்தில் தி. மு. கவினர் கலந்துகொள்ளவில்லை. சேஷன் தனது நூல் ஒன்றில் முன்னாள் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா ஒரு சி. ஐ. ஏ. ஏஜன்ட் என குறிப்பிட்டதும் இதனால் தமிழகத்தில் ஏற்பட்ட எதிர்ப்பை தொடர்ந்து அப்பகுதி நூலில் இருந்து நீக்கப்பட்டதும் தெரிந்ததே.

## க.பொ.த (சா/த) பரீட்சை நிர்வாக அலுவலர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்கள வலயம் இரண்டின் கீழுள்ள க.பொ.த. (சா/த) டிசம்பர் 94- பரீட்சை நிர்வாக அலுவலர்களின் அறிவுறுத்தல் கூட்டம் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி கல்விக்கோட்டங்களுக்கான கூட்டம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் நாளை புதன் காலை ஒன்பது மணிக்கும்,

கோப்பாய், உடுவில், சங்கானை, தெல்லிப்பளை, சண்டிலிப்பாய் கல்விக்கோட்டங்களுக்கான கூட்டம்மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை மறுதினம் (வியாழன்) காலை ஒன்பது மணிக்கும் நடைபெறவுள்ளதாகவலயம் இரண்டு கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## நுளம்பை கட்டுப்படுத்தும் ஒருபகுதி மருந்து வந்தது

(யாழ்ப்பாணம்)

குளத்திலும் மற்றும் நீர்த் தேக்கங்களிலும் உள்ள நுளம்பின் குடம்பிகளை அழிப்பதற்கான மருந்தை மட்டுப்படுத்தப்பட்ட அளவு வடபகுதிக்கு கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மலேரியா தடுப்பு இயக்கத்தினர் நீண்டநாட்களாக இந்த மருந்திற்கும் மலத்தியோன் மருந்திற்கும்தமது தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டிருந்தும் தற்பொழுதே இதற்கு அனுமதி கிடைத்துள்ளது. மலத்தியோன் மருந்தும் தேவையான அளவின் கால்பங்கே அனுமதிக்கப்பட்டு வந்து சேர்ந்துள்ளது அனுமதிக்கப்பட்ட இந்த 20 லீற்றர் மருந்து வந்து சேரும் பட்சத்தில் ஓரளவு நுளம்பு பெருக்கத்தை யாழ்குடாநாட்டில் கட்டுப்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

(இ.நி)

### கிழக்கு

அடைந்துள்ளனர். களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி பகுதிகளில் 5450 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

ஆனைகட்டியவெளி தாம்போதி உடைந்துள்ளதால் இப்பகுதிக்கான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. படுவான்கரையில் விதைத்து ஒரு மாதம்கூட ஆகாத நெற்பயிர் நீரில் மூழ்கிவிட்டது. காத்தான்குடியில் 50 ஆயிரம் பேர் வெள்ளத்தினால் அகதிகளாக உள்ளனர்.

உன்னிச்சை, வாகனேரி, ரூகம், நவகிரி குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயத்தில் உள்ளன. பல கிராமங்களில் வெள்ளத்தினால் தொற்றுநோய் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

### பரீட்சை

தாக தெரியவரவில்லை.

அநேகமாக கடந்த யூலை மாதப்பகுதியில் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த இவர்களுக்கே அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறவில்லை என தெரியவருகின்றது. [பா]

### கௌரவ

பல்கலைக்கழக செனட்டின் இந்நல்லெண்ண நடவடிக்கையை பாராட்டுவதாகவும் இதற்கென ஜனாதிபதி நன்றி தெரிவிப்பதாகவும் இப்பட்டத்தை ஏற்பதை பொருத்தமானதாக தாம் கருதவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடவடிக்கைகளில்தம்மைஈடுபடுத்தியுள்ளது. இவ் வமைப்பின்தலைவர்எஸ்.தவராஜா, உபதலைவர் எஸ். தர்மலிங்கம், எஸ். சிவராஜா, செயலாளர் சிறில்பாவரா, உதவிச் செயலாளர் திரு. குகன், ராஜரட்ணம், பொருளாளர் திரு. ராஜ்நடராஜா, உதவிப் பொருளாளர் திருமதி லலிதா விஸ்வநாதரெட்டி, திட்ட இணைப்பாளர் த. சற்குணானந்தன். ஆகியோர் உள்ளனர்.

## கணிதபாட செயலமர்வு

கல்வி வலயம் இரண்டில் க.பொ.த (உ/த) வகுப்புக்களில் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நாளையும்-நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

திரு. வெக்டர் வேலாயுதம் அவர்களால் நடாத்தப்படும் இச் செயலமர்வில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார்.

### நோயால்

மரணமாகியுள்ளன.

இதேவேளை கடந்த ஆண்டில், யாழ்குடாநாட்டில் மரணமான குழந்தைகளின் எண்ணிக்கை 366 என்பது குறிப்பிடத்தக்கது. (நி. இ)

### நிவாரணம்

மக்களை இதுவரை எவ்வித உதவியும் சென்றடைந்ததாக தெரியவில்லை எனவும்தெரியவருகிறது.

தமிழ் மக்களின் வீடுகளும் கூரைகளும் வெள்ளத்தால் சேதமடைந்துள்ளதாகவும் வயற் காணிகள் கால்நடைகள் பெருந்தொகையில் அழிந்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

### தலைவர்

ரால் கொல்லப்பட்ட முக்கிய உறுப்பினர் ஒருவரது மரணம் தொடர்பாக அரசாங்கம் விசாரணை நடத்த முன்வந்துள்ளதாகக் கூறியுள்ளது.

## கலைத்திறன் செயற்பாடுகள் விரிவாக்க நடவடிக்கை

தமிழ் மொழி கலைத்திறன் செயற்பாடுகள் பள்ளிமாணவர்களிடையே பள்ளிநாள்களிற் பரந்த பங்குபற்றல் அடிப்படையில் விரிவாக்கஞ் செய்யப்பெறவுள்ளன இதற்கான தெளிவான அறிவுறுத்தல்களை வழங்குமுகமாகப் புதிய கையேட்டை ஆக்கும் பணியில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஈடுபட்டுள்ளது.

செயற்பாடுகள் பற்றிய வடிவமைப்பை இறுதி நிலைப்படுத்துவதற்கு உதவியாக 1994 -ஆம் ஆண்டில் நடைமுறையிலிடப்பெற்ற கையேட்டில் மேற்கொள்ளப் பெறவேண்டிய திருத்தங்கள் [சேர்க்கைகள் தவிர்ப்புக்கள் பற்றிய அனைத்துப் பள்ளிமுதல்வர்களும் தமது மேலான கருத்துக்களை டிசம்பர் மாதம் ஆறாம் நாளுக்கு முன் நல்லூரிலமைந்துள்ள கல்விக் கழகப் பணிமனையில் வழங்கியுதவுமாறு கேட்கப்படுகின்றனர்.

வட-தமிழீழப் பெருநிலப்பரப்புக்கிளையினரின் கருத்துக்களையும் சேர்த்து ஆராய்ந்து 1995 ஆம் ஆண்டுக்குரிய கையேடு இவ்வாண்டு இறுதியிலேயே பள்ளிகளுக்கு வழங்க ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் மேற்குறிப்பிட்ட நாளுக்கு முன்னதாக பள்ளிகள், கல்லூரிகளின் கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## மருமகன் தாக்கியதில் மாமியார் பலியானார்

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தில் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமியார் பலியானார்.

சிறுப்பிட்டியில் நேற்று பிற்பகல் நடைபெற்ற இச்சம்பவத்தின் போது அதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமி இராசம்மா (வயது 49) என்பவரே பலியானவராவார்.

இவரது மகளின் கணவர் தாக்கியதாலேயே மரணம் சம்பவித்ததாக தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி இறந்தவரின் உடல் கோப்பாய் காவல் துறையினரால் விசாரணைக்காக யாழ் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. [சி]

## கட்சித்தலைமைப் பதவியில் எனக்குப் போட்டியில்லை

### ரணில் விக்கிரமசிங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

கட்சியின் தலைமைப் பதவிக்கு யாரிடமிருந்தும் எனக்கு அச்சுறுத்தல் வரவில்லை, மேலும் ஐ.தே.கவின் சகல மட்டங்களின் பிரதிநிதிகளோடும் பேச்சுக்களை நடத்தியுள்ளேன். எனவே எனது நிலைக்கு ஆபத்து வரப் போவதில்லை.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. சிங்கள சேவைக்கு அவர் அளித்துள்ள பேட்டியொன்றில் கட்சியின் உப தலைவர் தெரிவு உங்களைப் பாதிக்குமா எனக்கேட்கப்பட்டபோதே ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் தன்னிடமே இருப்பதாகவும் இந்த நிலையில் ஐ.தே.க. தனதுபூரணகட்டுப்பாட்டுக்குள் இருப்பது தெளிவானது எனவும் தெரிவித்துள்ளார்.

## இந்து சாதனம் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சாதனம் கார்த்திகை மாத இதழ் புதுமெருகுடன் வெளிவருகிறது. இதன் வெளியீட்டு விழா நாளை காலை 9.30 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### வீரச்சாவு

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட,

★ லெப். ஐங்கரன் (சோமசுந்தரம் ராஜா, மட்டு.)

★ ஆதரவாளர் சதா (மட்டக்களப்பு.) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகர் இராணுவ கடற்படை கூட்டு முகாமில் இருந்து நேற்று காலை 8.35 மணியளவில் பொன்னாலை கடற் பரப்பினை நோக்கி எறிகணைகள் வீசப்பட்டன. அவ்வேளை தொழிலில் மீனவர்கள் குறைவாகவே ஈடுபட்டிருந்தனர் இதனால்உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனதெரியவருகிறது.

(41)

## மரண அறிவித்தல்

### மனோகரராஜா

தாவடியைச் சேர்ந்த பரராஜசிங்கம், அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மகன் மனோகரராஜா (செல்வன்) காலமாகிவிட்டார். சிறிஸ்காந்தராஜா (இத்தாலி), நவரட்ணராஜா (கொழும்பு), அருந்தவமலர், பவளமலர், காலம்சென்ற யோகராஜா, சவுந்தரராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பகவதிமலர், நேசகுமார் (இத்தாலி), காலம் சென்ற சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி. இ. நேசகுமார்
(சகோதரி)

(10226)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29.ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.